

லயன் காமிக்ஸ்
எமனுடன் ஒரு யுத்தம்!
6 வது ஆண்டு மலர்!




*அன்பான வாசகர்களே,*

*புதுமையான சைஸில், அருமையான கதையுடன் வந்திருக்கும் இந்த இதழ்- உங்கள் அபிமான லயன் காமிக்ஸின்* ஆருவது ஆண்டு மலர்!

*தொடர்ந்து வாசகர்களாகிய நீங்களும், விற்பனையாள நண்பர்களும் ஆதரவு காட்டி வருவதால் தான் நமது லயன் இந்த அளவிற்கு வளர்ச்சியடைந்துள்ளது! வரும் வருடங்களிலும் இதே அன்பையும், ஆதரவையும் எதிர்நோக்கியிருக்கிறோம்!*


அதே தருணத்தில்—
நான் கவனிக்கட்டுமா...ரெட்?
வேண்டாம்... எனக்கு பாதுகாப்பு கொடு—போதும்!
ஷெரீப்புக்கு எச்சரி கை விடுக்கத்தானே போகிறேன்...
வகையாக கொடுத்து விட்டு வா!
ஷெரீப்பின் அலுவலகத்தினுள்...
என்னால் முடிந்ததை செய்கிறேன் கிறிஸ .. ஆனால் என்னிடமிருந்துநிறைய எதிர்பார்க்காதே!
என கால்நடைகளை தொடர்ந்து நான் இழந்து வருவதை சகித்துக் கொண்டு சும்மாயிருக்கச் சொல்கிறீர்களா...?
இல்லை... இல்லை—நான் என்ன சொன்னேன் என்றால் ..
?
ஹாய்...ஷெரீப்!
ரெட்! இருபத்திநாலுமணி நேரத்திற்குள் நீ நகரத்தைவிட்டு வெளியேறி ஓடிப்போக வேண்டும் என்று எச்சரித்திருந்தேனில்லையா?
ஹீ ..ஹீ எனக்கு ஞாபக மறதி அதிகம் ஷெரீப்!
நம்மில் ஒருவர் வெளியேற வேண்டும் என்றால் அது நீதான் ஷெரீப்...
என் எச்சரிக்கையை அலட்சியம் செய்வது நல்லதல்ல!
இப்போ...நீ வெளியே போகப் போகிறாயா— இல்லையா!


ஆவ்...!
டுமீல்
ஏதாவது விஷமத்தனமாக செய்ய, நினைக்காதே தம்பி...உன முழங் காலையும் நொறுக்கிவிடுவேன்!
சீக்கிரமாக டாக்டரிடம் போய்கட்டுப் போட்டுக் கொள் ஷெரீப்...
நாளை மீண்டும் நான் வரும்போது இங்கே உன் முஞ்சி தென்பட்டால் அப்போது மீண்டும் கையை குறிவைக்கமாட்டேன் — அதை இப்போதே சொல்லிவிட்டேன்!
ஆனால் அந்த மூர்க்கன் வெளியேறியபோது—
நில்... அங்கே!
யாரடா...என் வழியில் குறுக்கிடுவது?
டுமீல்
டுமீல்


ஆனால், டெக்ஸ் வில்லரின் துப்பாக்கி முந்திக்கொண்டு முழங்கியது
டுமீல்
டுமீல்
டுமீல்
ஆ... ஐயோ!
ஆங்கே என்ன கலாட்டா?
இரண்டு அந்நியர்கள்... ரெட்டையும் அவனது சகோதரனையும் சுட்டு விட்டார்கள்
அவன்களை சும்மா விடக்கூடாது!
ஏய்... ஆத்திரப்படாதே!
இதற்கு ஆத்திரப்படாமல்...? உனக்கென்ன புத்திமாருட்டமா? விலகு... அப்பால்!
ஹேய்...! என் ஆட்களை கொன்றவர்களை நான் பழிதீர்க்க வேண்டும்..
கிட்... வம்பு வருகிறது!



எங்கே அந்தப் பன்றிகள்!
இதோ...இங்கே இருக்கிறோம்—பிரதர்!
மீண்டும் லாரெடோவின் சாலைகளில் துப்பாக்கி முழக்கம் எதிரொலிக்கலாயிற்று...
டுமீல்
டுமீல்
டுமீல்
பின்னர் தோட்டாக்களின் சீறல் ஒருவழியாக ஓய்ந்தபோது மூன்றுவது உடல் தரையை முத்தமிட்டுக்கொண்டு விழுந்துகிடந்தது
இங்கே இன்னும் வேறு யாருக்காவது அவசரமாக கல்லறைக்கு போய்ச் சேர ஆசையிருந்தால் முன் வரலாம்!
போதும்!இங்கேஎங்களில்யாருக்கும் அந்த ஆசையில்லை-ஆட்டத்தை இத்தோடு நிறுத்திக்கொள்ளுங்கள்
நல்லது!
வா...கிட்! உள்ளே போய்ப்பார்ப்போம்!
இந்நகரம் தன் ஷெரீப்பை இழந்து விட்டதாகத் தோன்றுகிறது!


இல்லை...! அதிர்ஷ்டவசமாக தோளில் காயம் ஏற்பட்டிருக்கிறது—அவ்வளவுதான்!
வாருங்கள் உள்ளே! தாகத்திற்கு ஏதாவது பருக விரும்புவீர்கள் என்று நினைக்கிறேன்!
கொடுங்கள்...நன்றி சொல்வோம!
ஆக...மிக மோசமாக எதுவும் நிகழ்ந்துவிடவில்லை- இல்லையா?
இல்லை..! ரெட் திமிர்த்தனமாக ஆட்டம்போட முயன்றான்— அவ்வளவுதான்!
வெளியே கேட்ட தோட்டா முழக்கத்தின் முடிவிலும் ரெட் உயிரோடுதானிருக்கிறான் என்று சொல்லிவிடாதீர்கள்!
முதலில் ரெட் என்பது யார் என்றுசொல்...' அவனை இன்னாரென்று எனக்குத் தெரியாது ஆனால் ஒன்று சொல்வேன்-வெளியேபுழுதியில்மூன்று பிணங்கள் கிடக்கின்றன!
மூன்றாவது நபர் ஒரு ஆத்திரக்காரன்—அவசரக்காரன் என்றுமட்டும் தெரிகிறது
ஸாரி...இந்த களேபரத்தில் உங்களுடையபெயர்களைகேட்க மறந்தே போய்விட்டேன்!
நான்—டெக்ஸ் வில்லர்! இவர்—கிட் கார்ஸன்!


கிறிஸ்...உன் பிரச்னை ஏறத்தாழ தீர்ந்துவிட்டமாதிரிதான்!
இவர்களை உங்களுக்குத் தெரியுமா . ஷெரிப்?
வில்லரும், கார்ஸனுமா? இப்போது
ருர்கள் என்று!
பார்த்துப் பழகியதில்லை... இவர்களுடைய அருமை பெருமைகளை நிறைய கேள்விப்பட்டிருக்கிறேன்
ஷெரிப்...பருக ஏதோ தருவதாக நீங்கள் சொன்னீர்கள்!
இதற்கிடையே —
பில்லும் செத்துவிட்டானு?
ஆமாம்! அவனை தாக்கியது எது என்று அறியாமலே செத்துப்போய் விட்டான்
பில்லின் உடலை அப்புறப்படுத்திக்கொண்டு வந்து விட்டேன் ஆனல் ரெட்டும், அவனது சகோதரனும் இன்னமும் அங்கேயே கிடக்கிறுர்கள்
பீதியடைந்து விட்டாயா?
பின்னே...? அவர்களுடைய சாகஸத்தை நீ நேரில் பார்த்திருந்தால் இப்படி கிண்டல் பேசமாட்டாய்.
அடேயப்பா...! இது மாதிரி என் வாழ்நாளில் கண்டதேயில்லை.
விஷயத்தை நீ போய் கென்னெட்டிடம் தெரிவிக்க வேண்டும்.


ஒருமணி நேரத்திற்குப்பின் தாங்கள் நகருக்குள் வந்ததும் ஏற்பாடு செய்திருந்த ஹோட்டலைநோக்கி நடந்தார்கள் டெக்ஸும், கார்ஸனும்...
எனக்கு பசிக்கிறதப்பா...!
பொறு...முதலில் முகம், கை கால் கழுவிக்கொள்ள வேண்டும் எனக்கு!
ச்சொ...!
?
எங்களுடைய பைகளை எங்கே வைத்திருக்கிறாய்?
ம்ம் அறை எண் 12ல் ஸார்.. இரண்டாவதுமாடி
சரி...சாவியைக்கொடு— சீக்கிரம்!
சாவியா...? ஓ...! மேலே தான் இருக்கிறது ஸார்... அறையை சுத்தம் செய்து கொண்டிருக்கிறார்கள்
டெக்ஸ்-இவன் ஒன்று-மடையனாக இருக்கவேண்டும் அல்லது எதையோ மறைக்கமுயற்சிப்பதாக இருக்க வேண்டும்!
நிஜம் எப்படியிருந்தாலும் பாதகமில்லை...!
சைத்தான்கள்...! நான் உடனே ப்ரெடின் ஆட்களை எச்சரிக்கவேண்டும்


அவர்கள் கையும் களவுமாக பிடிபட்டால் என்மீது பொல் லாப்பு வரக்கூடும்...! ம்ம்— முதல்மாடி...
ஆனுல் டெக்ஸும் கார்ஸனும் முதல் மாடியை சென்றடைந்தபோது அறை எண் 12 அங்கேயே இருப்பதைக் கு செயலாக தெரிந்துகொண்டார்கள்
அந்தப்பயல் இரண்டாவது மாடி என்றல்லவா சொன்னுன்...
ஹே...! இதோ... பன்னிரண்டு!
தப்பாக உளறி யிருக்கிருன்...
ம்ம்...
!
ஏய்...யார் நீங்கள்?
?
சே... எக்கச்சக்கமாகமாட் டிக்கொண்டு விட்டோம் ..
சுடு டெட்!
ஆனுல் டெக்ஸ் முந்திக் கொண்டு விட்டார்...
டுமீல்
டுமீல்
ஆவ்!


அடுத்தவர்களுடைய அறையினுள் பிரவேசிப்பது தப்பு என்று உங்களுக்கு யாரும் சொல்லித்தரவில்லையா
இ..இது-உங்களோட அறைன்னு...எங்களுக்குத்தெரியாது!
சாமர்த்தியமாக பேசுவதாக நினைப்போ...?
எங்களுடைய பைகளை சோதனையிட உங்களை இங்கே அனுப்பியது யார்
யாருமில்லை
அப்படியானால் நான் முதலில் கணித்ததைவிட மிகப்பெரிய முட்டாள்களாக இருப்பீர்கள் போலிருக்கிறது-- கிட்...ஏதாவது குறைகிறதா என்று பார்
சட்டென்று பைகளை சோதனையிட்டு முடித்த கிட், முடிவில்...
!
எல்லாமே இருக்கின்றன...
ஆல்ரைட்...கைகளை மேலே தூக்குங்கள்'
எங்களை என்ன செய்யப்போகிறீர்கள் நாங்கள்தான் எதையுமே திருடவில்லையே?
அதானே?
வாஸ்தவம்தான்...! அதனால் உங்களை வெளியே துரத்தியடிப்பதோடு நிறுத்திக்கொள்ளப் போகிறேன்-ஷெரீப்பின் ஆபீஸ்வரை ஒரு நடை போய் வரக்கூட தகுதியற்ற கோமாளிகள் நீங்கள்...


வெளியே போங்கடா நாய்களா!
நண்பனுக்கு நடந்த மரியாதையை பார்த்த மற்றவன் மறுகணம் தானாக வெளியேறினான்.
சத்
சமர்த்து...! எனக்கு ஒரு வேலை மிச்சம்!
நகரை விட்டே ஓடிப்போயிடணும்...! மறுபடியும் என் எதிரில் வந்தீர்களோ குடலை உருவி விடுவேன் ஜாக்கிரதை!
ஆனால் — இதற்கிடையே...
அவர்களை நான் கொன்று விட வேண்டும்...!
இல்லையேல் கென்னடியின் ஆட்கள் என்னைக்கொன்று விடுவார்கள்!



ஆட்டத்தின் ஆரம்பம்!
பதுங்கிப் பதுங்கி மேலே போனுன் அந்த ஹோட்டல் பணியாள்
இவர்களை நான் தீர்த்துக்கட்டி விட்டால், விட்டது தொல்லை என்று கென்னட் சந்தோஷப்படக்கூடும்...
என்னிடம் கருணையோடு தாராளமாகவும் நடந்து கொள்வார் என்று எதிர் பார்க்கலாம்
ஆனுல் அவன் மேலேறி வரும் ஓசை, மேலே இருந்தவர்களின் செவியில் விழுந்து உஷார்படுத்தி விட்டது...
மறுவிஞ்டி—அவனை இருதுப்பாக்கி முனைகள் வரவேற்றன...
ஓ...! ஹோட்டல் பணியாள்!
நா... நா.. நான்—
முயல் வேட்டைக்கு போய்க் கொண்டிருந்தேன்... என்று சொல்லப்போகிருயா...?



எ....என்னை துன் புறுத்தாதீர்கள்
உன்னை நாங்கள் எதற்கு துன்புறுத்தப்போகிறோம்?
சில உண்மைகளை நீ கக்கவேண்டும் என்று எதிர்பார்க்கிறேன் — அவ்வளவுதான்!
அஹ்..
டமால்
உதவி!
அடடே....உதவி கோருகிறான் — நம்மிடம்!
க்ராக்
யாராவது கத்தினால் எனக்குப்பொறுக்காது!
இவனுக்கு மயக்கம் தெளியுமுன் சட்டிப்போட்டு விடலாம்
சில நிமிடங்களுக்குப்பின்
நம் தோழர் விழித்துக் கொண்டு விட்டார்...
ஹும்ம்...ம்


இப்போது சொல் – அந்த இரு மடையர்களையும் எங்களுடைய பைகளைசோதனையிட ஏன் அனுமதித்தாய்!
ஹம்ம்...ம்
சும்மா முனகாதே...! நன்றாக நினைவு படுத்திப்பார்த்துச் சொல்...!எங்களோடு சமரசமாகப்போக ஆசையில்லையா உனக்கு!
இல்லை — என்கிறான்
எனக்கு ஒரேயடியாக பசிக்கிறது... இவனோடு என்ன வெட்டிப்பேச்சு... வா போகலாம்
பொறு...! இவனைப் பேச வைக்க வழி எனக்குத் தெரியும்!
அவனுடைய ஒரு ஷூவையும் சாக்ஸையும் கழற்றிவிட்டு, விரல்களுக்கிடையே ஒரு தீக்குச்சி செருகி வைத்தார் கார்ஸன்...
இவனுக்கு மூளை அந்த இடத்தில் இருககிறது என்பது உன கணிப்பா?
ஆமாம்...!
இம்மாதிரி பயல்கள் தங்களுடைய மூளையை எங்கேயாவது இரகசியமாக பதுக்கிவைத்துவிடக் கூடியவர்கள்...
ம்ம்ம்....
சரி...நண்பரே — இப்போதாவது வாயைத் திறக்கப்போகிறீரா இல்லையா?


கார்லஸன் அந்த தீக்குச்சியை பற்ற
வைத்தார்...அது வேகமாகப் பற்றி
எரிந்து பிரம்பு கீற்றை தொட்ட
போது —
.. ம்ம்
அருமையான
துள்ளல்!
ஏய்...கட்டிலே
நொறுக்கிவிடாதே!
இவனை அமுக்கிப்பிடி..
இன்னொன்றை
பற்றவைக்கிறேன்
ம்ம்....
பேச இஷ்டமா?
ம்ம்ம்...
உன் யுக்தி பலித்து
விட்டது கிட்...
ரொம்பவும் நம்
பகமானது!
சரி...மளமளவென்று
விஷயங்களை கக்கு..
கிறுக்கன்.. என் காலை சுட்டுப்
பொசுக்கிவிட்டான்!


உன் கால் வலி எப்படி இருக்கிறதுஎன்று கேட்டுத் தெரிந்து கொள்வதற்காக உன் வாய்க் கட்டை நான் நீக்கவில்லை .. தம்பி!
உங்களுக்கு என்ன தெரிய வேண்டும்?
எங்களுடைய அறையை சோதனையிட்ட குரங்குகள் யார்?
கென்னட்டின் ஆட்கள்
யார்து- கென்னட்?
இன்னமும் அது உங்களுக்குத் தெரியாதா? அடுத்த இருபத்தி நான்கு மணி நேரத்திற்குப் பின்னும் நீங்கள் உயிரோடிருந்தால் கென்னட் யாரென்று தானாகவே தெரிந்து கொள்வீர்கள் இந்த பகுதியில் பாதி அவருக்குச் சொந்தம்!
நூறு மைல் சுற்றுவட்டாரத்திற்கு அவர் வைத்ததுதான சட்டம்!
எங்கள் மீது அவன அக்கறை காட்டக் காரணம்?
ரெட்டையும் அவனுடைய சகோதரனையும் நீங்கள் கொன்றுவிட்டீர்கள்.. எனவே, நீங்கள் யாரென்று தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறார்.
ஓகோ..
நீயும் அவனுடைய கையாளா?
இந்த ஹோட்டல் அவருடையது... என் வேலை நிலைக்க வேண்டுமானால்—
புரிகிறது!


ஆசாமி இந்த நகரில் தானா இருக்கிறாரா?
உயிர்மீது ஆசை இல்லைஎன்றால் நகரின் மத்திய பகுதிக்குச் செல்லுங்கள்...
டல்லாஸ் என்று அப்பகுதிக்குப்பெயர்... அவரைச் சுற்றி அடியாட்கள் கூட்டம் ஏராளம்... அவர் சுடு என்று சொன்னால் போதும், உங்களுக்கு உடனே பரலோகப் பயணம்தான்!
அப்படியா... சேதி!
ஆல்ரைட்...! இது போதும் எங்களுக்கு!
ஐயோ.. வேண்டாம்!
வாயை மூடடா முட்டாள்... கத்தியால் உன்னை குத்தப் போகிறேன் என்று நினைத்து விட்டாயா?
கட்டுக்கயிறு அறுத்தெறிய முற்பட்டேன்.
ஓடு... ஓடிப்போய் கென்னட்டிடம் சொல்- நாங்கள் சீக்கிரமே அங்கே வர தீர்மானித்திருப்பதாக!
உங்களுக்குநீங்களேசவக் குழி தோண்டிக் கொள் வதற்குச் சமானம் அது!
பின்னால் வேட்டைநாய் துரத்தி வருகின்ற பீதியில் ஓட்டம் பிடிக்கும் முயலைப்போல் வாசலைநோக்கிப் பாய்ந்தான் அவன்...



ஒவ்வ்..!
இதற்கிடையே டல்லாஸ்பகுதி யில் ஒரு மாடி அறையில்...
ஆக உங்களை கையும் களவு மாக பிடித்துவிட்டார் களாகும்
சாதாரண போக்கிரிகள் என நுஎண்ணி விட்டோம்
ஆமாம் பாஸ்.. ஆனல்—
வாயை மூடடா ...முண்டம்!
உங்களுடைய உளறல்களைக்கேட்டால் கிறுக்கன்கூட சிரிப்பான்... ஆல்ரைட். அங்கே நீங்கள் கண்ட தென்ன?
எதுவுமில்லை!
வெறும் துணிமணிகள்தான்... வரைபடங்களோ வேறு காகி தங்களோ இல்லை...
ஒகோ...
வேலை தேடிவந்த அடாவடி பயல்கள் என்ற என் கணிப்பு உறுதிப்படுகிறது...
அவர்களை கவனிக்கும் பொறுப்பை நாங்கள்ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பது உங்கள் கட்டளையா?



அதிரடியாக எங்களை தோற்கடித்து விட்டார்கள்...ஆனால் இன்னொரு முறை
நோ...!
முதலில் அவர்கள் யார் என்று எனக்குத் தெரிந்தாக வேண்டும் துப்பாக்கியைகையாளுவதில் படு சமர்த்தர்களாக இருக்கிறார்கள்
எனக்கு அவர்கள் ரொம்பவும் பயன்படுவார்கள் என்று தோன்றுகிறது...
ஆனால் — அதே தருணத்தில் ..
உள்ளே வரலாம்!
மில்லர்! ஏன் இப்படி தலை தெறிக்க ஓடிவருகிறாய் ஏதோ ஹோட்டலில் தீப் பற்றிக் கொண்டுவிட்ட மாதிரி!
நிஜமாகவே அப்படித்தான்..! என் கால் பற்றி எரிகிறது.. பாஸ்!
அவர்கள் இருவரையும் நான் கொல்ல முற்பட்டபோது அவர்களிடம் அகப்பட்டுக் கொண்டுவிட்டேன். என்னை கட்டிப் போட்டு கால்விரல் இடுக்கில் தீக்குச்சியை வைத்து எரியவிட்டார்கள் அந்த சண்டாளர்கள்...
பின்னே நீ அவர்களை கொல்ல முயன்றதை பாராட்டி பரிசு கொடுத்து அனுப்புவார்கள் என்று எதிர்பார்த்தாய்?
அவர்கள் இருவரும் செத்து விழும்வரை எனக்கு நிம்மதியே கிடையாது!


அதுசரி...அவர்களை கொல்லச் சொல்லி யார் உனக்கு உத் தரவு இட்டது?
வந்து - அவர்கள்... உங்களுக்கு எதிராக..
எனக்கு எதிராகவா...? இந்த நிமிடம் வரை எனக்கு எதிராக அவர்கள் எதையுமே செய்யவில்லை!
பில்லுக்கும், ரெட் சகோதரர் களுக்கும் விபரீதமாக என் னவோ செய்திருக்கிறார்கள்..
...உங்கள் மூவருக்கும், நீங்கள் அடிமடையர்களாக இருப்பதால் வகையாக கொடுத்தனுப்பியி ருக்கிறார்கள்! அவ்வளவுதானே?
ஆனால் அவர்கள் இங்கே வரப்போவதாக சொல் லியிருக்கிறார்கள்
வெரிகுட்! தாராளமாக வரட்டுமே! அவர்களை வரவேற்க ஆவலோடு காத்திருக்கிறேன்!
சரி என் முன் நில்லாதே ...போய்த்தொலை!
இதற்கிடையே லாரெடோ ரெஸ்டாரெண்ட்டில்—
கென்னட், என்பவனைப் பற்றி நீ என்ன நினைக்கிறாய்?
நம்மோடு ஒத்துப் போகிற ஆள்மாதிரி தோன்றுகிறது
ஆனாலும் நாம் அவசரப்பட்டு எந்த முடிவுக்கும்வந்துவிடலாகாது
ஆமாம்....ஒரு சந்திப்பு அவசியம் என்று நினைக் கிறேன்.


அனைவர் மீதும் ஆதிக்கம்செலுத்த நினைக்கும் ஆணவக்காரர்களில் ஒருவனாக இருக்கக்கூடும் என்பதோடு...
உஷ்ஷ்...
பருக ஏதாவது தரட்டுமா ஸார்?
வேண்டாம்... பில்லைக் கொண்டுவா?
அதையடுத்து—
இந்தாருங்கள் மீதத்தொகை...
நன்றி
மீதத்தொகையை எண்ணி சரி பார்க்கும் பாவனையில்வேகமாக டாலர் நோட்டுக்களின் மீது நோட்டம்விட்ட டெக்ஸின் விழி களில் சட்டென்று ஒருபிரகாசம் மிளிர்ந்தது...
குட்...! அடையாளமிட்ட நோட்டுக்கள் இரண்டு..!
?
ஏதாவது தென்பட்டதா?
ஆமாம்... இரண்டில்!
வா.. போய் பரிசோதித்துப்பார்ப்போம்.
எங்கே...? ஹோட்டலுக்கா?



இல்லே... உருப்பெருக்கிக் கண்ணுடி லாயத்தில் இருக்கிறது. அங்கே சென்றுவிட்டு பிறகு ஷெரீப்பின் ஆபீஸுக்குப்போவோம்.
சலூன்
ஆனல்
ரிக்... அவர்கள் நோட்டுக்களே பார்வையிட்டவிதம் சரியில்லே பின்தொடர்ந்துசெல்.
ஆமாம். அதுதான் சரி!
கால்மணிநேரம் கழித்து —
ஷெரீப்பிடம் பேசச் சென்றிருக்கிருர்கள்
முதலில் லாயத்திற்கு சென்றுவிட்டு பிறகு ஷெரீப்பின் ஆபீஸுக்குள் நுழைந்ததை பார்த்தால் சரியாகப் படலேயே!
மர்மச் செய்தி!
என்ன பேசுகிருர்கள் என்று ஒட்டுக் கேட்க எனக்கு ஒரு வாய்ப்புக்கிட்டுமா?



உள்ளே...
காப்பி தயாரித்து எடுத்துவரட்டுமா?
நல்ல யோசனை — அப்படியே செய்...மேரி!
ஷெரீப்பின் மனைவி அகன்றதும், டெக்ஸ் இரண்டு டாலர் நோட்டுக்களையும் உருப் பெருக்கின கண்ணாடியையும் வெளியில் எடுத்து மேஜைமீது வைத்தார்
இதோ...ஸ்டேட்ஸ் என்ற வார்த்தைக் குப்பின் ஒரு புள்ளி இருக்கிறது ..!
TES.
RICA
அடுத்து கீழ் பார்டரை கவனிப்போம்
அங்கே என்ன இருக்கிறது ..?
இருக்கிறது!
ஒரு பென்சிலை எடுத்து குறித்துக்கொள்
?
இதோ...
ம் ..ரெடி!
பெரிய புதர்
பெரிய புதர்



அவ்வளவுதாஞ!
அவசரப்படாதே
இதோ-
ஆற்றோரம் ..
ஆற்றோரம்
ஒன்றுமே புரியவில்லேயே! நோட்டு களில் எழுதப்பட்டுள்ள இந்த வார்த்தைகளுக்கு என்ன அர்த்தம்!
நான் விளக்கம் கொடுக் கிறேன்—கேட்டுக் கொள்ளுங்கள்
முதலில் இந்த இரு நோட்டுக்களிலும் தென்படும் வார்த்தைகளே ஒழுங்கு பண்ணிக்கொண்டு விடுவோம்
டாம் வெர்ஞன் மற்ற விபரங்களே வெவ்வேறு நோட்டுக்களில் குறிப்பிட்டிருக்கலாம்..ஆனல் நம் ஆராய்ச்சிக்கு ஒரு தொடக்கம் கொடுக்க கிடைத்திருக்கும் தகவல்களே போதுமானவை
தன் டயரியை எடுத்து தீவிரமாக ஒரு கண்ணேட்டம் விட்டார் டெக்ஸ்...
ஆமாம்...! இதுவே போதும்!


எனக்கு என்ன தோன்றுகிறது என்றால் இங்கே அச்சிடப்படும் கள்ள நோட்டுக் களின் மூலம் இச்செய்தியை வெர்னன் இரகசியமாக அனுப்பி வருகிறான்.
யெஸ்...ஷெரீப்! அசல் மாதிரியே வெகு சாமர்த்தியமாக தயாரிக்கப்பட்ட கள்ள நோட்டுக்கள் இவை..
இந்த கள்ள நோட்டுக்கள் புழக்கத்தில் இருப்பதை முதலில் கண்டுபிடித்த நபர் கால்வெஸ்டனில் ஒரு பாங்க் காஷியர். ஸ்டேட்ஸ் என்ற வார்த்தைக்கு அடுத்து ஒரு புள்ளி இருப்பதைக் கண்டு வியந்த அந்த காஷியர் விஷயத்தை தன் மானேஜரிடம் தெரிவித்திருக்கிறார்.
அந்த மானேஜர் அந்த நோட்டை வாஷிங்டனிலுள்ள பெடரல் பாங்கிற்கு அனுப்பி வைத்தார். வல்லுனர்கள் அதை ஆராய்ந்து உண்மையை கண்டறிய!
அவர்கள் இரண்டு உண்மைகளை கண்டு பிடித்தார்கள்... ஒன்று-நோட்டிலிருந்த வாட்டர் மார்க் ஒழுங்கின்றி இருந்தது.. இரண்டு-நோட்டின் கீழ்பகுதியில் நுண்ணிய எழுத்தில் டாம் வெர்னன் என்ற பெயர் இருந்தது.
அப்போது, ரிக் பக்கத்து மாடித்தளத்தில் வந்து பதுங்கிக் கொண்டான். ஷெரீப்பும் மற்றவர்களும் இருந்த அறையை இப்போது அவனால் பார்க்க முடிந்தது.
அதோ இருக்கிறார்கள்...! அவர்கள் பேசிக்கொள்வதை கேட்கமுடியுமோ என்னவோ!



ம்ம்...! ஷெரீப் நன்ருகத்தானிருக்கிருர்...!ரெட் அவரை ஒரேயடியாக தீர்த்துக்கட்டியிருக்க வேண்டும்!
அந்தப்பெயரை கண்ட மாத்திரத்தில் அதிகாரிகள் விழிப்படைந்தனர்...வெர்ஞன் அச்சு தயாரிப்பதில்நிபுணன், கடைசியாக :பெடரல்பாங்க் வெளியிட்ட கரன்ஸி வரிசை டிஸைன்கூட அவன் தயாரித்ததுதான்...
அப்போது ஷெரீப்பின் மனைவி காப்பியை எடுத்துக்கொண்டு உள்ளே வந்தாள்.
காப்பி...ரெடி!
அப்போது தற்செயலாக அவளுடைய பார்வை மேலேபோனது ..
ஆ...அதோ அங்கே ஓர் ஆள்—
பதுங்குங்கள்!
டுமீல், டுமீல்
டமார்
யாரவன்...சண்டாளன்!



இனியும் இங்கே இருந்தால் ஆபத்து...
டுமீல்
கிட்... இடப்பக்க மாக வா...
சே... இன்ன இடமப்பா இது— ஷெரிப்பின் வீட்டிற்குள்ளேகூட நிம்மதியாக இருக்கமுடிய வில்லையே!
டுமீல் டுமீல்
அதோ..! பயலை நான் கவ னித்துக்கொள்கிறேன்!
டுமீல் டுமீல்
சரியான எமன்கள்!
கூரையை தாண்டிச்சென்று மறைந்து விட்டான்!
கொல்லைப்புற வழியேதப்பியோட முயற்சிக்கக்கூடும்விடக்கூடாது


அவனுக்கு ஒரு பாடம் கற்பித்து அனுப்ப வேண்டியது அவசியம்
அப்படியானால் இன்னும் வேகமாகப் போ
இதற்கிடையே—
ஹே...! ரிக்?
விலகி வழி விடுங்கடா... முட்டாள்களா!
இங்கே என்ன பண்ணிக் கிட்டிருக்கே...?
இவனால் இவ்வளவு வேகமாக ஓடமுடியுமா என்ன...!
அதுதானே...!
அப்போது—
ஐயோ...வழுக்குகிறது!
ஹே...கிட்— ஜாக்கிரதை
தொலைந்தேன்...!
ஆகாயத்திலிருந்து வந்து குதித்ததுபோல் 'தொம்' மென்று இடையே விழுந்தார் கார்ஸன்.
ஆ!
பெ...பெ...பேய்!



வேட்டை நாய்களைவிட மோசமானவர்கள்...!
ஆனால் கூரை மீதிருந்த டெக்ஸ் அவனை பார்த்து விட்டார்...
டுமீல்!
ஹேய்ய்...நில் அப்படியே!
நிற்க எனக்கென்ன பைத்தியமா?
இதற்குள் சுதா -ரித்து எழுந்து கொண்ட - - கார்ஸனும் சுடலானார்.
டுமீல்! டுமீல்!
இனி ஆயுளுக்கும் இந்தப் பயல் கள் இருக்கும் திசையில் தலை வைத்துப்படுக்க மாட்டேன்.
பாய்ச்சலாக ஓடி திருப்பத் தில் மறைந்து விட்டான் ரிக்....
விரியன் பாம்புகளைவிட கொடியவர்கள்!



தோட்டாவை வீணடிக்காதே டெக்ஸ் பயல் ஓடிப்போய் விட்டான்.
இவன்கள் யார்?
பசங்களா... யார் நீங்கள்!
ஐயோ... துப்பாக்கியை நீட்டாதே — எங்களிடம் ஆயுதம் எதுவும் கிடையாது!
ரிக்கோடு நீங்கள் நடத்தும் மோதலில் எங்களுக்கு எந்தப் பங்கும்கிடையாது
அவன் யாரென்று தெரியுமா உங்களுக்கு?
இங்கே எல்லோருக்கும் அவனைத்தெரியும்! லாஸ் வெகாஸில் கிராண்டின் கையாள்... பெயர் — ரிக்!
லாஸ் வெகாஸ் — நாங்கள் உணவருந்திய இடம்!
என்ன ஆயிற்று?
இவர்கள் அப்பாவிகள்... உளவுபார்க்க வந்தவனை இவர்களுக்குதெரிந்திருக்கிறது!
அவர்கள் போகட்டும் — நீ திரும்பி வா! அடுத்து என்ன செய்வது என்பது பற்றி ஆலோசிப்போம்!
இதோ... வருகிறேன்!


போய்த்தொலையுங்கள்... எங்கள் வழியில் குறுக்கிட்டீர்களோ தெரியும் சேதி!
மாட்டோம்!
ஆமா!
இதற்கிடையே —
நீ திரும்பி விட்டாயா... அதற்குள்!
ஆமாம்... அதிர்ஷ்டம் துணை புரிந்ததால்!
சிங்கம், புலி ஏதாவது உன்னை துரத்தி வருகிறமாதிரி அல்லவா ஓடிவருகிறும்...!
கிண்டலா!
நீ பின் தொடரச்சொன்ன அந்த ஆட்கள் சிங்கம், புலி என்ன பேய், பிசாசுகளைவிட பயங்கர மானவர்கள்
!
என்னதான் நடந்தது?
நீ உளவறிவதை தெரிந்து கொண்டு விட்டார்களா?
ஆமாம்...!
அடுத்த வீட்டு கூரைமீது ஏறி பதுங்கிய நிலையில் ஷெரீப்பின் வீட்டினுள் நடப்பதை நோட்டம்விட்டேன்.
லாயத்திற்குச் சென்று எதையோ எடுத்துக்கொண்டு இருவரும் ஷெரீப்பின் வீட்டிற்குச் சென்றார்கள்


அவர்கள்என்னபேசிக் கொண்டார்கள்?
அதற்கு வாய்ப்பு கிட்டவில்லை ஒரு டாலர் நோட்டை ஷெரீப் பிடம் அவர்கள் காட்டிக் கொண்டிருந்தார்கள்
அப்போது அந்த அறையினுள் பிரவேசித்த ஷெரீப்பின் மனைவி என்னைப்பார்த்து விட்டாள். உடனே கூச்சலிடலானாள...
சே... என்ன ஒரு துரதிர்ஷ்டம்!
ஆம்... துரதிர்ஷ்டம்தான்...! நான் உடனே துப்பாக்கியால் சுடலானேன். ஆனால் அந்தசண்டாளர்கள் வட்டியும் முதலுமாக திருப்பிக் கொடுத்தார்கள்
ஓகோ
உன்னை பின் தொடர்ந்து வந்தார்களா
இல்லை... அதை நான் உறுதிப் படுத்திக்கொண்ட பின்னரே இங்கே நுழைந்தேன்!
நல்லது!
அவர்களுடைய உரையாடலை நீ கேட்க முடியாமல் போனது துரதிர்ஷ்டமானது ஆனாலும் நீ பார்த்த காட்சி போதும் என் சந்தேகத்தை ஊர்ஜிதப்படுத்த!
அரசாங்க அதிகாரி களா?
ஆமாம்! நாம் கென்னடை எச்சரிக்க வேண்டும்
ஆனால் அப்போது டெக்ஸும், கார்ஸனும் புயலென உள்ளே பிரவேசித்தனர்.
எல்லோரும் அப்படியே நில்லுங்கள்!


கைகள் மேஜைக்கு மேலே இருக்கட்டும் இந்தஹோட்டலின்சொந்தக் காரனோடு கொஞ்சம் பேச வந்திருக்கிறோம்!
அவர்களே தான்!
அதை இப்படிக் கொடு... கிராண்ட் யாரென்று அவர்களுக்கு புரிய வைக்கிறேன்!
இந்தாருங்க பார...
ஹோட்டலில் அதிரடி!
ஏய்... எங்களை சுட்டுவிடாதீர்க கிராண்டுக்கும் எங்களுக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை!
பயப்படாதீர்கள்...!
ஹோட்டல் முதலாளி எங்கே இருக்கிறான் என்று யாராவது சொல்ல முடியுமா?
திடீரென்று உள் அறை கதவை படீரென்று திறந்து துப்பாக்கியை முழக்கிக்கொண்டு வெளிப்பட்டான் கிராண்ட்.
டுமீல்!
டுமீல்
இதோ இருக்கிறேனடா... நா


இவன்களை பரலோகத்திற்கு அனுப்பு... ரிக்!
டுமீல்!
டுமீல்!
ஆவ்...!
டுமீல்!
ஐயோ!
டுமீல்!
டுமீல்!
நாசமாகப் போக
ஏய்...ஓடாதே நில்
நிற்பதா...?
மின்னல் வேகத்தில்; சமையலறை பகுதியினுள் நுழைந்து தலை தெறிக்க ஓட்டம் பிடித்தான் ரிக்.
?



அவனை தப்பவிடாதே— விரட்டிப்பிடி கிட்...!
உயிரின்மீது ஆசையிருந்தால் அப்படியே அவரவர் இடத்தில் உட்காருங்கள்!
நாங்கள் அப்பாவிகள்...!
குனிந்து கிராண்ட்டை சோதித்த டெக்ஸ், உயிர் இன்னமும் ஒட்டிக்கொண்டிருப்பதை அறிந்து அவனை கேள்வி கேட்கலானார்.
இனி நீ பிழைக்க மாட்டாய்! மனசாட்சியின் உறுத்தலை போக்க இதுவே சந்தர்ப்பம் உனக்கு.
கள்ள நோட்டு... விவகாரத்தை ஆராயவந்தாயா?
ஆமாம்...! அவை எங்கே அச்சிடப்படுகின்றன என்று தெரிய வேண்டும் எனக்கு! சொல்வாயா?
ந...நரகத்திற்குப் போ...
அவசியம் ஏற்பட்டால் அங்கேயும் போகத் தயங்கமாட்டேன்.
மறுநிமிடம் —
தப்பிவிட்டானா?
உண்மையை சொல்வதானால் அவனுடைய கால் தடத்தைக்கூட நான் காணமுடியவில்லை!


...ளே சமையல்காரன் ஒருவன் ...யால் நடுங்கி செத்துக்கொண் ...க்கிறான்...அவனை நீ ...திக்க விரும்புகிறாயா?
நிச்சயமாக...
மற்றவர்கள் போகலாம் ! உங்களில் சாப்பிட்ட பில்லுக்குரிய தொகையை எப்படியாவது செலுத்த நினைக்கும் நாணயஸ்தர்கள் கிராண்ட்டுக்கு மலர் மாலை வாங்கலாம்.
நா...நான் எதுவும் ...ணலே!
ஏன் மிரள்கிறாய் .. நான் ஒன்றும் உன்னை விழுங்கப்போவதில்லை!
கிராண்ட்டைப்பற்றி உனக்கு என்னவெல்லாம் தெரியும்?
சில கேள்விகளுக்கு நீ பதில் தரவேண்டும்!
எதுவும் தெரியாது... நான் இங்கேவந்து இரண்டு மாதம் தான் ஆகிறது
...ண்டு மாதத்தில் எவ்வளவோ ...ந்துகொண்டு விடலாமே — ...கமா ஆடுகிறாய்?
?
அவனுடைய நண்பர்கள்யார்! என்ன வகையான மோசடியில் அவன்ஈடுபட்டிருந்தான்?
எனக்குத் தெரியாது ..
ஆவவ . !


அவனை ரொம்பவும் வதைக்காதே...கிட்!
அப்படி நான் என்ன செய்துவிட்டேன்?
சும்மா... அவனுடைய நாற்காலியை தொட்டேன்-அவ்வளவுதான்!
எழுந்திரடா! உன்னைத்தான்!
மிஸ்டர்-நான்...
மூடு வாயை-நான கேட்கும் கேள்விகளுக்கு மட்டும் பதில் வரவேண்டும்.
உன் மாஜி முதலாளியைப் பற்றி உனக்கு தெரிந்ததை எல்லாம் சொல்!
ஐயோ...நான் அதைச்சொன்னால் கிரா-ண்ட்டின் நண்பர்கள் என்னை கொன்று போட்டுவிடுவார்கள்.
சொல்லாவிட்டால் நான் இப்போதே உன்னைக் கொன்று போட்டுவிடுவேன்!
?!
எனவே, சமர்த்தாக பதில் சொல்.
வே-வேண் - டாம் - ஆனால் எனக்கு அதிகமா தெரியாது!



தெரிந்ததை ஒளிக்காமல் சொல்- போதும்!
இந்த ஹோட்டலின் முதலாளி கிராண்ட் இஸ்லே-மிஸ்டர் கென்னட்-
ம்ம்-மேலே சொல்!
ஒவ்வொரு வாரமும் கலெக்ஷனை எடுத்துச் சென்று கென்னட்டின் ஆட்களிடம் கொடுத்துவிட்டு, பதிலுக்கு புத்தம் புது சலவை நோட்டு கட்டுகளை வாங்கி வருவார் கிராண்ட்!
சலவை நோட்-டுக்கள்! கேட்டாயா-
ம்ம்...கேட்டுக் கொண்டுதானிருக்கிறேன்!
ம்ம்-கேட்க சுவாரஸ்யமாக இருக்கிறது-மேலே சொல்!
அவை கள்ள நோட்டுக்கள் என்று எப்போதாவது உனக்கு தோன்றியதுண்டா?
உண்டு!
டுமீல்
ஐயோ... அம்மா!
கார்ஸன்! பதுங்கு!
டுமீல்
டுமீல்


விளக்கை குறிவை-
சீக்கிரம்!
டுமீல்
பளர்!
நாசமாகப் போக!
டுமீல்
அந்த சோதாவுக்குப்பதில் நான் இந்தசண்டாளர்களை குறி வைத்திருக்க வேண்டும்!
டுமீல்!
மார்டின்... என்ன விஷயம்?
மற்றவர்களும் வந்து கொண்டிருக்கிறார்கள்.
இரண்டு உள்வாளிகளும் சமையலறையினுள் இருக்கிறார்கள்.
கேட்டாயா?
ம்ம்-


இழவு விழப்போகிறது இங்கே... நிறைய!
சமாதி நமக்கோ என்ற ஐயம் வருகிறது-
அந்த கொலைகாரர்களை நான் தேக்கி வைக்கிறேன்-நீ கதவை தகர்க்க முடியாதவாறு ஏதாவது செய்!
டமீல்
ஓ.கே!
வெளியே
கென்னட்டின் ஆட்கள் யாரையோ வளைக்கிறார்கள்!
உஷ்ஷ்!
RANCH
பேசாதே-அவர்கள் காதில் விழுந்தால் நம் உயிர் போயிடும்!
ஆமாம்... நமக்கேன் வம்பு!
லாரெடாவை விட்டு உயிரோடு வெளியேற அந்த அந்நியர்களை அனுமதிக்கலாகாது என்பது கென்னட்டின் விருப்பம்.
அதை நீ எனக்குச் சொல்ல வேண்டுமா - என்ன?
விடிவதற்குள் அவர்கள் இருவரும் சமாதிக்குள் அடங்கிப்போவது உறுதி!
லாஸ் வெகாஸ் அதோ- ஜாக்கிரதை!


ஹோட்டலின் உள்ளே-
ஓய்ந்து விட்டதே-முன்னேற்பாடு நடக்கிறதோ?
விருந்தாளிகள் நிறைய வந்திருக்கிறார்கள் வா-வரவேற்பு கொடுப்போம்!
இதோ-வந்து விட்டேன்!
டாம் நீ ஜன்னலே கவனி-ப்ரென்ட் நீ போய்... ஹே-!
டுமீல்!
இது எச்சரிக்கைக்காக! அடுத்து-கிராண்டுக்கு நேர்ந்த கதிதான் உங்களுக்கும்!
பொறு-சுடாதே
நாங்கள் உங்களோடு சண்டை போட வரவில்லே-தூதுவர்களாக வந்திருக்கிறோம்.
அப்படியா ? நான் வெறிபிடித்த நாய்கள் கூட்டமோ என்றெண்ணி விட்டேன்!
தூதுவர்களாகவா? யார் சார்பில்?
சண்டாளா!


மிஸ்டர் கென்னட் அனுப்பினார். பயப்படாதீர்கள். அவர் உங்களோடு பேச விரும்புகிறார். அவ்வளவு தான்!
நல்ல யோசனை தான்!
அதோ ஜன்னலின் பின்னால் நிற்கிறார்கள்!
அப்போது, ஹோட்டலின் பின்புறமாக வந்து நிலைமையை ஆராய்ந்த இரண்டு போக்கிரிகளும், அதுதான் சமயம் என்று சுடத் தொடங்கினர்.
இதோ.
கிட் விலகிப் பதுங்கு!
பதுங்கி நின்று சுடுங்கள்!
டுமீல்!
கென்னட் பேச விரும்பும் போதெல்லாம் இப்படித்தான் டஜன் கொலையாளிகளைத் தூதாக அனுப்பி வைப்பாரோ?
ஹோட்டலின் முகப்பில் குழுமியிருந்த மற்ற போக்கிரிகளும் வாய்ப்பை உணர்ந்து சட்டென்று தெருவில் பரவலாக விலகி நின்று சரமாரியாக சுடலாயினர்.
நட்பு நாடி வந்திருக்கிறவர்களிடம் பேசுகிற முறை இதுவல்ல!
எந்த கெட்ட நோக்கமும் இல்லை என்று சொன்னானே. பார்த்தாயா?
விரியன்கள் அத்தனை பேரும்!


பின்னல் சென்று கொல்லேப் புற வாசலேக் கண்காணித்து நிற்கச் சொல்- அவர்கள் இருவரிடமும்!
ஓ.கே
டுமீல்
சரணடையுங்கள். உயிர் மீது ஆசை இருந்தால்!
அப்படியொரு நப்பாசையா உங்களுக்கு?
டுமீல்
டுமீல்
அவர்களே நீ தனியாகத் தேக்கி நிறுத்த முடியுமா கிட்!
முயற்சிக்கிறேன்- நீ என்ன செய்யப் போகிறுய்?
டுமீல்
மாடிக்கு போகிறேன். அங்கேருந்து அவர்களே குறி வைப்பது சுலபமாக இருக்கும்?
அந்த கதவை இடித்துத் தகர்த்தால் என்ன?
அருமையான யோசனே!
நீயும், கர்ட்டும் ஓடிச் சென்று கனமான மாத்தடி ஒன்றைத் தூக்கி வாருங்கள்- சீக்கிரம்!


நாகஇரவு!
அவாகள் இருவரும் அகன்றதும் மற்றவா-கள் தொடாந்து துப்பாக்கியை முழக்கிக் கொண்டிருந்தனா.
டுமீல்
டுமீல்
சார்ர்
சார்ர்
சரமாரியாகச் சுடுகிறுன்களே- இலக்கின்றி!
இதற்கிடையே நான்கு படிக-ளாகத் தாவி மாடிக்கு விரைந்த டெக்ஸ் தாழிட்டிருந்த கதவை மோதித்தகா்த்து முன்னேறிஞா.
க்ராக்!
திருவிழாவுக்கு பட்டாசு, வாண வேடிக்கை நடப்பது போலல்லவா இருக்கிறது- வெளியே!
அதோ- அத்தனை பேரும் காா்ஸனின் ஜன்னலே இலக்கு வைத்து துப்பாக்கியை முழக்கிக்கொண்டிருக்கிறாகள்-
VEGAS


எத்தனைபேரை என்னால் வீழ்த்த முடியும் என்று இப்போது முடிவாகிவிடும்!
டுமீல்
ஆ·
ஜாக்கிரதை - முத
மாடி ஜன்னலை க
இதை அவர்கள் கொஞ் சமும் எதிர்பார்க்கவில்லை என்று தோன்றுகிறது.
டுமீல்!
ஆ ஆ ஆ!
டெக்ஸ் கைவரிசை காட்டத் தொடங்கி விட்டான். நானும் இனி ஆரம்பிக்க வேண்டி யது தான்!
ஆ ஆ!
கீழ் ஜன்னலையும் கவனி!
டுமீல்!
ஆ ஆ!


அம்மாடி- எத்தனை தோட்டாக்கள்.
விஷ்!
டுமீல்!
ஆ ஆ
பின் வாங்குங்கள்...எங்கேயாவது பதுங்குங்கள்!
ஆ ஆ!
டுமீல்!
பின்வாங்கி ஓடுகிறீர்களா- முதுகை குறிவைக்கிறேன்!
டுமீல்!
ஓடுகிறீர்களா...ஊஹூம்- விடமாட்டேன்!
டுமீல்!
ஆ ஆ-
சைத்தான்கள்!
வாருங்கள்.. ஓடிப் போய் விடுவோம்!


சுடும் வரம்புக்கு அப்பால் ஓடி விட்டார்கள்!
அதே சமயம்-
பில்- எங்களுக்குப் பாதுகாப்பு கொடு!
வாங்கடா தம்பிகளா!
ஹே- மேல் ஜன்னலைக் கவனி!
ஆனால் அந்த எச்சரிக்கை சற்று முன்னதாக வந்திருக்க வேண்டும்...
டுமீல்!
ஆ ஆ!
ஆஆ!
ஆஆ!
ஹூம் - மேலே இருக்கிற யமனை குறிவைக்க முடிந்தால்...
வா-பில்!
நிற்பது
உசிதமல்ல!


க்ராக்!
ஊய்ய்- இன்னும் இரண்டு அங்குலம் தாழ்வாக வந்திருந்தால் நான் பரலோகம் போயிருப்பேன்!
பீதியடையாதீர்கள்! அதிரடியாக் தாக்கி விட்டார்களே தவிர நமக்கு நிகராக மாட்டார்கள். ஒரு கை பார்த்து விடலாம்!
முட்டாள்தனமாகப் பேசாதே பில்! அவர்கள் இருவர்தானே என்று நினைத்து தப்புக் கணக்குப் போடாதே. ஒவ்வொருத்தனும் நூறுபேருக்குச் சமம்- சுடுவதில்!
அதிர்ஷ்டக் காற்று அவர்கள் பக்கம் வீசுகிறது! அவர்கள் நம்மை திறந்தவெளியில் வைத்து தாக்கியதால்தான் இப்படியொரு மோசமான விளைவு. . இல்லையேல் அவர்கள் இந்நேரம் யமலோகம் போயிருப்பது உறுதி!
இருக்கலாம்! இன்னும் கொஞ்சம் கூடுதல் ஆள் பலம் இருந்தால் நல்லதில்லையா?
கவலைப்படாதே! சீக்கிரமே நிறைய ஆட்கள் வந்து சேருவார்கள். இங்கே நடக்கிற கலாட்டா இந்நேரம் டல்லாஸை எட்டியிருக்கும் நமக்கு உதவ நிறைய ஆட்களை கென்னட் நிச்சயமாக அனுப்பி வைப்பார்!
இடையில், ஏற்பட்ட ஓய்வை அமைதியாய நோட்டம் விட ஒருவாய்ப்பாக எடுத்துக் கொண்ட டெக்ஸ் மேஜை மீது ஒரு கரன்ஸி நோட்டுக் கட்டு கிடப்பதைக் கண்டார்.
அந்நியர் யாரும் இங்கே வரமாட்டார்கள் என்ற எண்ணத்தில் எவ்வளவு அலட்சியமாக போட்டு வைத்திருக்கிறார்கள்!
பத்து டாலர் நோட்டுக்கள்!


இவையும் கள்ள நோட்டுக்களா கத்தானிருக்கக்கூடும்!
புள்ளி இருக்கிறதா!
யெஸ்! இதோ-!
TREASURY OF
TATES.
ERICA
இந்த பத்து டாலர் நோட்டில் நிச்சயமாக ஏதேனும் புதிய தகவல் இருக்கக் கூடும்!
வெளியே துஷ்டர்-கள் அதிக எண்ணிக் கையில் இல்லை என் பது சாதகமான அம்சம்!
இந்த நோட்டை நுணுக்க மாக ஆராய ஓர் அமைதி யான இடம் தேவை-
எதிரிகளின் ஆள் பலம் அதிகரிப்-பதற்குள் இங்கிருந்து அகன்று விடுவது நல்லது!
கிட்- வா போகலாம்!
வேறு ஏதாவது புதிய ஆபத்து சூழ்ந்துள்ளதா?


இல்லை! வேறு சில நோட்டுக்கள் இங்கே அகப்பட்டன. அவற்றை ஆராய அமைதியான இடம் ஒன்று அவசியப்படுகிறது!
அடடே அப்படியா சேதி!
ஆனால் வெளியே தலைகாட்டினால் அந்தக் கிராதகர்கள் நம்மை சல்லடையாகத் துளைத்து விடும் அபாயமுண்டு!
சுலபமாகத் தப்பிக்க ஒரு வழி இருக்கிறது!
முகப்பு வாயில் கதவை திறக்க தயாராக இரு!
சரி!
ஒரு மேஜையை கவிழ்த்தி அதன் மீது மேஜை விரிப்புத் துணிகளை விரித்தார். விளக்கிலிருந்த எண்ணெயை அவற்றின் மீது கொட்டி, தீக்குச்சியைப் பற்ற வைத்து தீ மூட்டினார்.
துணி நன்றாகப் பற்றி எரிந்த போது ஈரத்துணி ஒன்றை மேலாகப் போர்த்துவதுபோல் விரித்துப் பிடித்தார்.
நாம் வெளியேறுவது எதிரிகளின் பார்வையில் படாமல் இந்தப் புகை மண்டலம் மறைக்கும்!
ஐயோ-ஹோட்டலில் தீப்பற்றிக் கொண்டு விட்டது!
தோட்டா ஏதாவது ஒரு விளக்கைத் தாக்கியிருக்குமோ?
முட்டாள்தனமாகப் பேசாதே! உள்ளே எந்த ஒரு விளக்கும் எரிந்து கொண்டிருக்கவில்லை என்பதை மறந்து விட்டாயா?


கார்ஸன் திற கதவை! என் பின்னாலேயே ஓடி வா!
ஓ.கே!
ம்ம்- ஓடி வா!
சூழ்ச்சி புரிகிறது! தப்
ஓடும் யுக்தி இது!
டுமீல்!
கிட்- சீக்கிரம்!
இதோ!
ராட்- முன்னேறு! முன்- ஆ ஆ!
முன்னேறுவதா?
விஷ்!
யமன்களை நோக்-
கியா? ஊஹூம்!


லாயத்திற்கு போவோம்!
ம்ம்!
சில நிமிடங்களுக்குப் பின் டெக்ஸும், கிட்டும் லாரெடோவை விட்டுப் புயல் வேகத்தில் வெளியேறிக் கொண்டு இருந்தனர்.
யாரும் நம்மைப் பின் தொடர்ந்து வரக் காணோம்!
அவசரப்பட்டு எதையும் சொல்லாதே!
நாம் அவர்களுடைய கள்ள நோட்டு மோசடியை ஆராய்வது அவர்களுக்குத் தெரியும். எனவே லேசில் ஓய மாட்டார்கள்!
உண்மைதான்!
ஆகவேதான் இப்படி தப்பியோடுகிறோமா?
தப்பியோடுகிறோமா? சேச்சே- சமயத்தில் பின்வாங்குவதும் சண்டையில் ஒரு யுக்திதானே?
சரி- நாம் இப்போது எங்கே போகிறோம்?
அமைதியான ஏதாவது ஓர் இடத்திற்கு!
அங்கே லாரெடோவில்-
இது மாதிரி ஒரு படுகொலையை நான் கண்டதேயில்லை!
அந்த இரு அந்நியர்களும் தப்பி விட்டார்களா?


ம்ம்- நகரை விட்டு வெளி-யேறி ஓடி விட்டனர்!
கோழைகள்! அவர்கள் மட்டும் அங்கே இருந்தால்?
இருந்தால்?
ஒருபாடம் கற்பித்திருக்கலாம் என்று சொல்லவந்தேன்
பாடம் கற்றுக் கொள்ள வேண்டியவன் நீதான்! இந்தா!
ஏய்!
மற்றவர்களுக்கு சொல்கிறேன்- இன்னமும் கென்னட்தான் இங்கே அதிகாரம் படைத்தவர் என்பதை புரிந்து கொள்ளுங்கள்!
பின்னர் டல்லாஸில்-
இதற்கு முன் இப்படியொரு தொல்லை நமக்கு ஏற்பட்டதேயில்லை!
என்ன செய்யலாம்?
அவர்களை துரத்திச் செல்ல ஆட்களை அனுப்புவோமா?
வேண்டாம்! வீண் கால விரயம் தான் ஏற்படும்!
நிச்சயமாக?
கால்களைப் பயன்படுத்துவதைவிட மண்டையைப் பயன்படுத்துவதுதான் புத்திசாலித்தனம்! கள்ளநோட்டுக்கள் லாரெடோவிலிருந்து விநியோகிக்கப்படுகின்றன என்பதைத்தவிர அந்த அந்நியர்களுக்கு வேறெதுவும் தெரியாது!


அடித்துச்சொல்வேன்! இல்லையேல் இங்கே நகரத்தினுள் சுற்றிக் கொண்டிராமல் நேராக அச்சுக்கூடத்திற்கு அல்லவா போயிருப்பார்கள்!
உண்மைதான்! சரி- இப்போது என்ன செய்யலாம்?
முதல் காரியமாக இங்கே வினியோகத்திற்கு பதுக்கி வைத்திருக்கும் கரன்ஸிகளை உடனடியாக அச்சுக்கூடத்திற்கு திருப்பி அனுப்பி விட வேண்டும். அதன் பிறகு வாராஸ் பகுதியின் சுற்றுப் புறம் முழுக்க தீவிர கண்காணிப்பு ஏற்பாடு செய்யப்பட வேண்டும்!
SALO
இதற்கிடையே-
அதோ ஒரு பண்ணை வீடு- ஆள் நடமாட்டமும் தென்படுகிறது!
அனுமதி கோரி அங்கே தங்குவதற்கு முயற்சிப்போம்!
கைகளை உயர்த்துங்கள்!
வாடகைக்கு ஒரு துப்பாக்கி!
விஷமமாக எதையும் செய்ய முயற்சிக்காதீர்கள்!
கலவரமடையத் தேவையில்லை தம்பிகளா! நாங்கள் வழிப்போக்கர்கள் இன்றிரவை இங்கே தங்கிக் கழிக்க அனுமதி கோரி வந்திருக்கிறோம்!



யார் நீங்கள்? எங்கிருந்து வருகிறீர்கள்?
என் பெயர் டெக்ஸ் வில்லர். இவர் என் நண்பர் கிட் கார்ஸன். லாரெடோவில் இருந்து வருகிறோம்!
ஓ- வில்லரும் கார்ஸனுமா?
யாரோ என்றெண்ணி துப்பாக்கியை நீட்டி விட்டோம்!
எங்களுடைய இரத்தத்தை உறிஞ்சத் துடிக்காத நபர்களே இந்தப் பிராந்தியத்தில் காணவே முடியாதோ என்று நினைத்தோம்!
உங்களுடைய எரிச்சல் புரிகிறது மிஸ்டர் வில்லர்!
இந்த இடம் கிறிஸ் வெப்புக்குச் சொந்தமானது. ரெட்டும் அவனது சகோதரனும் ஷெரீப்பை சுட்டபோது அங்கே இருந்தவர் இவர்தான்!
ஓகோ- அப்படியா?
இன்றிரவு ஏன் இப்படியொரு கடுமையான பாதுகாப்பு ஏற்பாடு என்று நான் தெரிந்து கொள்ளலாமா?
எதிர் நடவடிக்கை எடுக்க ஒரு ரகசிய கூட்டம் ஏற்பாடு செய்திருக்கிறார் கிறிஸ்!
புரிகிறது!


கூட்டத்தில் நீங்களும் கலந்து கொள்ளலாம்!
வாருங்கள்-போகலாம்!
நல்ல யோசனை!
சில நிமிடங்களுக்குப் பின்-
என்ன-வில்லநம், கார்ஸனும் இங்கே வந்திருக்கிறார்களா? வெரிகுட்-அவர்களை இங்கே அழைத்து வா-சீக்கிரம்!
ஓ.கே. பாஸ்!
இடைஞ்சலாக வந்துவிட்டோமோ?
சேச்சே-அப்படியெல்லாம் ஏதுமில்லை! உங்களை மனதார வரவேற்கிறோம்!
இவர் பக்கத்துபண்ணை உரிமையாளர் பியர்ஸன். இவர் டபிள்ஜீரோ பண்ணையின் உரிமையாளர் ஸ்டில்வெல். இவர் முல்லர் பண்ணை உரிமையாளர்!
எல்லோருக்கும் வணக்கம்!
வணக்கம்!
உங்களை இங்கே துரத்தியடித்த சங்கதி என்னவென்று நான் தெரிந்து கொள்ளலாமா?
உங்களுக்கு ஏற்கனவே தெரிந்த ஒன்று தான்!
என்னதான் நடந்தது?
கள்ள நோட்டு விவகாரம் தவிர மற்ற விபரங்களை கோர்வையாக எடுத்துரைத்தார் டெக்ஸ்.
அந்த கொலை களத்தில் இனியும் தாமதிப்பது உசிதமல்ல என்று வெளியேறி ஓடி வந்து விட்டோம்!


நீங்கள் இன்னார் என்று தெரிந்திராத பட்சத்தில் உங்களுடைய கதையை நம்பியிருக்கவே மாட்டேன். நீங்கள் என்ன சாதித்திருக்கிறீர்கள்- தெரியுமா?
ஒரே நாளில் கென்னடியின் அடியாட்களில் மூன்றில் ஒரு பங்கினரை தீர்த்துக் கட்டியிருக்கிறீர்கள்!
கென்னடியை உங்களுக்குத் தெரியுமா?
கண்டங்கெடுத்த அயோக்கியன்! லாரெடோ முழுக்க அவன் வசத்தில்! மெள்ள சுற்றுப் புறத்தையும் தன் ஆதிக்கத்தின கீழ் கொண்டுவரும் முயற்சியில் இறங்கியிருக்கிறான்-
வளப்பமான மேய்ச்சல் நிலங்களை வளைத்துக் கொண்டதோடு அவனுடைய ஆட்கள் எங்களுடைய கால் நடைகளையும் திருடிச் செல்கின்றனர்.
ம்ம்
அதிகாரிகளிடம் புகார் கொடுத்திருப்பீர்கள் என்று நம்புகிறேன்!
கொடுத்தோம்! அவர்கள் ஒரு துப்பறிவாளரை அனுப்பி வைத்தனர். ஆனால் எட்டாவது நாள் அவர் ஒரேயடியாகக் காணாமல் போய்விட்டார்!
பூமி பிளந்து அவரை விழுங்கி விட்டது போல் தடயமே இல்லாமல் மறைந்து விட்டார்!
ஷெரீப்பிடம் போனீர்களா?


போனோம்! இப்போது இருப்பவருக்கு முன்னால் இங்கேஇருந்தவரிடம் முறையிட்டோம்· அதன் விளைவாக ஒருஃபெடரல் மார்ஷல் இங்கே வந்தார்.
ரெட் வில்சனா?
ஆமாம்! இது உங்களுக்கு தெரியும் என்றால் மிச்சக்கதையும் உங்களுக்கு தெரிந்திருக்குமே!
ஆமாம்! அறிக்கையை சென்ற வாரம் தான் படித்தேன!
இனம் தெரியாத கொலையாளி ஒருவனால் முதுகில் இருமுறை சுடப்பட்டு மாண்டு போனார் அந்த மார்ஷல்- இல்லையா?
ஆமாம்' அத்தோடு அப்போதிருந்த ஷெரீப மறு நாள் அவருடைய அறையினுள்ளேயே தோட்டா பாய்ந்து இறந்து போனார்!
இம்முறையும் கொலையாளி தப்பிவிட்டானா?
ஆமாம்!
இருட்டும் வேளை· அக்கம் பக்கத்தில் இருந்த ஒரு சிலரும் தாங்கள் எதையுமே பார்க்கவில்லை என்று சொல்லி விட்டார்கள்!
சரியாகப்படவில்லையே?
நிலவரம் மிகவும் மோசமாகிக் கொண்டு போகிறது மிஸ்டர் வில்லர். இப்போதைய ஷெரீப்புக்கு ஏற்பட்ட கதிதான் உங்களுக்கு தெரியுமே!
நிலைமையை எப்படி சமாளிப்பது என்றொரு வழிமுறையைக்கண்டறியவே இந்தக் கூட்டத்தைக் கூட்டினோம்;


நிலைமை இதே ரீதியில் நீடித்தால் சீக்கிரமே எங்களுடைய அழிவு நிச்சயமாகிவிடும். ஒன்று நாங்கள் எதிர்த்துப் போராட வேண்டும் அல்லது இடத்தைக் காலி செய்து விட்டு, எங்கேயாவது ஓடிப் போய் விட வேண்டும்!
நாம் போராடுவோம்·வெப்! மடிவதானாலும் வீரமுள்ள ஆண்மகனாக மடிவோம்!
இதையே! நான் ஆமோதிக்கிறேன்!
சரி தோழர்களே!
மிஸ்டர் வில்லரின் ஆலோசனையை கேட்போம். இவர் ஒரு ரேஞ்சர் என்பதோடு·
ஒரு நிமிஷம்.
ரேஞ்சர் என்ற முறையில் உங்களுடைய போராட்டத்தை நான் அங்கீகரிக்க முடியாது!
கென்னட் ஒரு கொலை பாதகன் என்ற காரணத்திற்காக அவனை கொல்ல உங்களுக்கு உரிமை கிட்டி விடாது!
ஆனால்-
பொறுங்கள்- நான் சொல்ல வந்ததை சொல்லி முடித்து விடுகிறேன்!
சட்டத்தை நீங்கள் கையில் எடுத்துக் கொள்வதை ரேஞ்சரான நான் கண்டு கொள்ளாமல் இருக்க முடியாது-
ஆனால், போராடுவது என்று நீங்கள் தீர்மானித்தால், தொல்லையிலிருந்து விடுபட நானொரு நல்ல ஆலோசனை தரமுடியும்·
என்ன- சொல்லுங்கள்!


முதலில் உங்களுடைய கால்நடைகள் அனைத்தையும் ஒன்றுதிரட்டி ஏதாவது ஒரு பத்திரமான இடத்தில அடைக்க வேண்டும்-இரண்டு வார காலத்திற்கு!
பிறகு?
இரண்டாவதாக, ஆஸ்டினுக்கு ஒரு விண்ணப்பம் எழுதி நீங்கள் அனைவரும் கையொப்பமிட்டு, என்னுடைய சிபாரிசு கடிதத்தை இணைத்து அனுப்ப வேண்டும்.
ரேஞ்சர்களின் தலைமையகத்திற்கா?
ஆமாம்! இம்முறை அவர்கள் கொஞ்சமும் தாமதமின்றி நடவடிக்கை எடுப்பது உறுதி!
அதெப்படி?
என்னுடைய கடிதம் உடன் செல்கிறதல்லவா- நிறைய புதிய தகவல்கள் அவர்களுக்கு அதில் சொல்லப்பட்டிருக்கும்!
சரி- உங்கள் ஆலோசனைப்படியே செய்கிறோம்!
சந்தோஷம்! கென்னட்டும் அவனுடைய கும்பலும் விரைவிலேயே உரிய தண்டனையைப் பெறுவது நிச்சயம்!
அதாவது விரைவிலேயே அழியப் போகிற ஒருவன் பொருட்டு நீங்கள் உங்களுடைய உயிரை பணயம் வைத்து நேரடி மோதலில் இறங்கத் தேவையிராது!
இந்த மாபெரும் உதவிக்கு எப்படித் தான் உங்களுக்கு கைமாறு செய்யப் போகிறோமோ?


இன்றிரவு நாங்கள் இங்கே தங்க வசதி செய்து கொடுத்தால் போதும்!
ஓ-தாராளமாக!
பின்னர் படுக்கையறையினுள்-
ஒவ்வொரு நோட்டிலும் ஒரே மாதிரியான தகவல்கள்- "பாலத்தைத் தாண்டி... நிலவறையில்..."
இம்மாதிரி தகவல்களை தந்திருப்பது ஏன்?
வெவ்வேறு மதிப்புள்ள கரன்ஸிகளுக்கான அச்சை தயாரிக்கும் போது பகுதி பகுதியாக ஒரு தகவலை இரகசியமாக சேர்த்திருக்கிறான் வெர்னன்!
?
தன் பரிதாபமான நிலைமையை ரகசியமாக பாங்க் அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு வரும் முயற்சி இது!
ஓகோ!
சரி- நம் அடுத்த நடவடிக்கை என்ன?
இப்போதைக்கு ஆனந்தமாக ஒரு தூக்கம் போடுவதுதான்!
நாளைப்பொழுது நமக்கு நீண்டதொரு நாளாக இருக்கப் போகிறது!
எனவே, அதற்கு முன் ஒரு நல்ல ஓய்வு அத்தியாவசியம்!
சரியாகச் சொன்னாய்!


மறுநாள் விடி-காலையில் வெப்பின் ஆள் ஒரு-வன் பண்ணையார்களின் மனு-வோடு டெக்ஸ் வில்லரின் சிபாரிசு கடிதத்தையும் எடுத்துக் கொண்டு, ரேஞ்சர்களின் தலைமையகம் இருக்கும் ஆஸ்டினை நோக்கி வேகப் பயணம் ஒன்றை மேற்கொண்டான்.
அதையடுத்து, டெக்ஸும் கிட்டும் புதிய குதிரைகளில் லாரெடோவை நோக்கிப் பயணமாயினர்.
நிஜமாகவே லாரெடோவுக்குத்தான் போகத்தீர்மானித்திருக்கிறாயா டெக்ஸ்?
ஏன் கேட்கிறாய்?
நம்முடைய மூட்டை முடிச்சுகள் அங்கே ஹோட்டலில் கிடக்கின்றன-அவற்றை இழக்க எனக்கு இஷ்டமில்லை!
ம்ம்.
அவற்றை மீட்டு வரச் செல்லும் முயற்சியில் நாம் விலை மதிப்பற்ற வேறு ஒன்றை இழந்து விடலாகாது!
கோழை மாதிரி பேசாதே!
நேற்று நாம் கற்பித்த பாடத்தை அவ்வளவு சீக்கிரமாக மறந்திருக்க மாட்டார்கள். இனியும் நம் வழிக்கு வருவதற்கு துணிவிருக்காது பயல்களுக்கு!
அப்படியே நம்புவோம்!
லாரெடோவில்.
இதுதான் கடைசிப் பெட்டி பாஸ்!
நல்லது!


அந்த இரு யமன்களும் ஒருவேளை இங்கே திரும்பிவந்தாலும் நமக்கு எதிராக எந்தத் தடயமும் இங்கே இனி அவர்கள் கண்ணில் படப் போவதில்லை!
வாராஸிடம் நான் என்ன சொல்ல?
நடந்ததை விபரமாக எடுத்துரைத்து அவன் மிக மிக விழிப்போடு இருக்க வேண்டும் என்று எச்சரித்து வை!
மேற்கொண்டு என்னசெய்ய வேண்டும் என்பது பற்றி ஆலோசிக்க மாலையில் அங்கே நான் வந்து சேருகிறேன்!
சரி!
எல்லையோர பாலம் வழியாக செல்லாதே. சுற்றி வளைத்து ப்யூண்டஸ் அருகே எல்லையைக் கடந்து செல்!
அலுப்பான சுற்று வழியாயிற்றே அது!
தொலைவு அதிகமானாலும் பாதுகாப்பானது. வண்டியில் மில்லியன் டாலர் பெறுமானமுள்ள கரன்ஸிகள் இருப்பதை மறந்து விடாதே!
ஓ.கே. நான் கிளம்புகிறேன்!
சரி-புறப்படுங்கள்!
யூயூ ஹீஹீ-!
ஆனால் வாகன் அங்கிருந்து அகன்ற மறு நிமிடமே பார்வையில் கள்ளம் நிறைந்த ஒரு மனிதன் கென்னட்டை நெருங்கினான்-
நான் ரெடி கென்னட். திட்டத்தில் மாற்றம் ஏதுமில்லையே?
இல்லை!


அவர்களைப் பின்தொடர்ந்து சென்று நான் ஏற்கனவே சொன்னபடி செய்- ஆனால் அவர்கள் மெக்ஸிக்கன் எல்லைக்குள் நுழையும் வரை நீ தாமதிக்க வேண்டும்- புரிகிறதா?
கோட்டை விட்டுவிடாதே! அதிலும் குறிப்பாக அந்தப் பயல் பானருக்கு நிறைய உண்மைகள் தெரியும்!
மூவரையும் இன்று மாலைக்குள் ஒட்டு மொத்தமாக தீர்த்துக் கட்டிவிடுகிறேன்- கவலையை விடுங்கள்!
சுமார் இரண்டு மணி நேரம் கழித்து-
ஆமாம்- அது அந்த இரு ஆசாமிகளேதான்!
ஙர்சமாகப் போக! நம்மை பின்தொடர்ந்து வருகிறான்களா என்ன?
உறுதியாக தெரியவில்லை. எதற்கும் நாம் நேராக ஆற்றை நோக்கிப்போவோம். வாகனில் உள்ள சரக்கோடு பிடிபட்டால் நமக்கு பத்தாண்டுகள் கடுங்காவல் தண்டனை நிச்சயம்!
ஆனால் டெக்ஸும், கிட்டும்-
நம்மை பார்த்ததும் பாதையை மாற்றிக் கொண்டு படுவேகமாக பறந்தோடுகிறார்களே ஏன்?
ஏதோ தில்லு முல்லு நடக்கிறது!
அப்படித்தானிருக்கும்! வா நெருங்கிச் சென்று நோட்டமிடுவோம்!
அவர்கள் எதையோ மறைக்கப் பார்க்கிறார்கள் என்கிறேன்- பந்தயத்திற்கு வருகிறாயா?


மரணத்தோடு ஒரு பந்தயம்!
அது உண்மை எனில், அவனுக்குப் பதில் ஐவரை நான் கொல்ல வேண்டியிருக்கும்!
எனக்கு அது ஒன்றும் கஷ்ட-மான காரியமே அல்ல!
இன்னும் வேக-மாக ஓட்டு!
இதற்கு மேல் எப்படி வேகமாக ஓட்டுவதாம்!
ரியோ கிராண்டை நோக்கிப் போகிறார்கள்!
மெக்ஸிக்கன் எல்லைக்குள் புகுந்து விடலாம் என்று நினைத்தாகள் எனில் அது அவர்கள் செய்யும் மிகப் பெரிய தப்பாக முடியும்!


ஆறு அதிக தொலைவு இல்லை- வேகமாக ஓட்டு!
இதற்கு மேல் வேக-மாகப்போனால் வண்டி கவிழ்ந்து விடுவது உறுதி!
நாம் தப்ப வேண்டும் எனில் வாகனை இங்கேயே விட்டு விட்டு ஓடிப்போவதுதான்!
உனக்கென்ன பைத்தியமா! வாகனில் என்ன இருக்கிறது என்பதை மறந்து விட்டாயா! நாம் சிறை செல்ல அது காரணமாகி விடும்!
ப்ரெட் சொல்வது சரிதான்! பெட்டிகளில் இருப்பது கள்ள நோட்டுக்கள்
தெரியும்!
ஆனால் இன்னும் கொஞ்ச நேரத் தில் அவை மறைந்து விடும்!
என்ன சொல்கிறாய் நீ?
சிறையில் பத்தாண்டுகளை கழிக்க எனக்கு இஷ்ட மில்லை!


வண்டியின் பின்பக்கம் இருக்கிறான். அந்த இரு சண்டாளர்களையும் சுடுவதற்கு முயற்சி செய்கிறானோ என்னமோ?
பிரிந்து செல்வோம்- நீ இடப் பக்கம் செல்!
இதற்கிடையே-
பத்தாண்டு சிறைவாசம்! அந்த தலையெழுத்தை தவிர்க்க இது ஒன்று தான் வழி!
இன்னும் ஒரு சில நிமிடங்கள்தான்-
க்ராக்!
தடம் தெரியாமல் அத்தனையும் எரிந்து சாம்பலாகிப்போகும்!
காற்று சாதகமாக வீசிக்கொண்டிருந்த தால் தீ வெகு வேகமாக பரவியது-
ஜிம் தன் இருக்கைக்குத் திரும்பினான்.
ஏய்- என்ன செய்தாய் அங்கே?
திரும்பிப் பார்- புரியும்!


ஐயோ - வாகன தீப்பற்றிக் கொண்டு விட்டது!
கென்னட் உன் தோலை உரிக்காமல் விடமாட்டார்!
அவர் என்னை எதுவும் செய்ய முடியாது!
இதைச் செய்து விட்டு அவர் எதிரே போய் நிற்க நான் என்ன இளிச்சவா-யனு? இப்படியே கண்காணுமல் ஓடிப் போய் விடத் தீர்மானித்து விட்டேன்!
அங்கே
வாகனில் தீ!
டுமீல்!
சுடும் எல்லைக்குள் நெருங்கி வந்து விட்டார்கள்!
குதிரைகள் மீது தாவிக்கொண்டு வாகனைக்கழற்றி விடுங்கள்!



டுமீல்!
முந்திக்கொண்டு சென்ற ஆசாமியை கச்சிதமாக குறிவைத்து அடித்தார் டெக்ஸ்.
டுமீல்!
ஜாக்கிரதை-!
நாசமாகப் போ!
குதி-கீழே!


க்ராக்!
ஐயோ-
ஆனால், மின்னல் வேகத்தில் துள்ளி எழுந்த பானர் ஆக்ரோஷமாக கார்ஸனை குறி வைத்துச் சுட்டான்-
டுமீல்!
ஆவ்வ்-
விஷ்!
டுமீல்!



டுமீல்!
ஆ!
அவனுடைய குதிரையை குறி வை-சீக்கிரம்!
அந்த தடியன்கள் கார்ஸனை கொன்றிருந்தால், இங்கேயே இப்போதே அத்தனை பேருக்கும் சமாதி கட்டுவேன்!
ஆவ்வ்
டுமீல்!


ஆ!
அப்படியே அசையாது நில்-இல்லையேல், உடம்பு சல்லடையாகிப் போகும்!
நீ யார் என்று எனக்குத் தெரியாது- ஆனால் என் நண்பனை சுட்டு வீழ்த்தியவன் நீதான் என்றறிவேன்!
அவன் மட்டும் செத்துப் போயிருக்கட்டும்-ஆயுள் முழுக்க நீ சித்திரவதை அனுபவிப்பாய்!


ஆனுல் அப்போது-
நீங்கள் இருவருமே அசையக் கூடாது!
அசையக் கூடாது என்று நான் இட்ட கட்டளை குறிப்பாக உனக்குத் தான்!
உனக்கென்ன பைத்தியமா? நீயும் கென்-னட்டின் ஆட்களில் ஒருவன் தானே?
வாஸ்தவம்தான்! ஆனுல் கென்னட்தான் உன்னைத் தீர்த்துக் கட்டச் சொல்லி உத்தரவிட்டிருக்கிறுர்!
இங்கே ரேஞ்சர்களின் நட-மாட்டம் அதிகமாகி வருவ-தாக தகவல் கிடைத்திருக்கிறது. சுயநல நோக்கோடு நீ எதையாவது-
உளறிக் கொட்டி விடக் கூடாது பார்! ஆகவே தான் இரகசியங்களைத் தெரிந்துவைத்திருப்பவர்களை ஒருவர் பாக்கியில்லாமல் களைய உத்தர-விட்டிருக்கிறுர்!
உன்னை நான் நம்ப மாட்டேன்! கென்னட் நன்கு அறிவார்-நான் அவருக்கு எந்த நிலையிலும் துரோகம் செய்ய மாட்டேன் என்று!



வே-வேண்டாம்!
வார்ட்டன் தன் காபினை இயக்கிய கணத்தில் டெக்ஸ் சட்டென்று கீழே விழுந்தார். உறையிலிருந்து துப்பாக்கியை உருவியவாறு ஆனால் விசையை அவர் இழுப்பதற்கு முன் தோட்டா முழக்கம் ஒன்று அங்கே எதிரொலித்தது.
டுமீல்!
?
அதே கணத்தில் வார்ட்டன் வெட்டுண்ட மரம் போல் கீழே சரிந்தான்.
ஸாரி-டெக்ஸ்-சற்று தாமதமாகி விட்டது!
கிட்!
நான்தான்! அதிர்ச்சியின் பாதிப்பு இன்னும் கொஞ்சம் பாக்கியிருக்கிறது-ஆனாலும், கஷ்டத்தில் இருக்கும் நண்பனுக்கு உதவிபுரிய தெம்பு இருக்கிறது!
இம்முறை நீ சொர்க்கம் புகுந்துவிட்டாய் என்றல்லவா நினைத்தேன்!


இல்லையேல், அந்தக் கிராதகன முதலில் உனைக் குறி வைத்திருப்பானே!
யாரிவர்கள்?
இவர்கள் கென்னட்டின் ஆட்கள் என்று நினைக்கிறேன்!
நம்மைக் கண்டதும் அவர்கள் அப்படி மிரண்டு ஓட்டம் பிடித்தது ஏனென்று புரிகிறதா?
நம் மூஞ்சியைப் பார்க்கப் பிடிக்கலேயோ என்னவோ?
இல்லே! இதோ இங்கே அரைகுறையாக எரிந்து கிடக்கும் இந்த நோட்டுக் கற்றைகளைப் பார்- புரியும்!
ஹய்ய்! டாலர் நோட்டுக் கட்டுக்கள்-ஏகப்பட்டவை!


ஒருவேளை அந்த இரு ரேஞ்சர்கள்
வழி மறித்திருப்பார்களோ?
அப்படித்தானிருக்க வேண்டும்! நாம் எச்சரிக்கையாக இருப்பது நல்லது!
ஆமாம்! அதுவும் நல்ல யோசனைதான்!
நிலவறையில் இரண்டுபேர் காவலுக்கு நில்லுங்கள்! எங்நோமும் விழிப்பாக இருக்க வேண்டும்!
சற்று நேரம் கழித்து-
கென்னடியின் ஆட்கள்- இந்த நேரத்தில்?
இங்கேதான்! நீங்கள் இருங்கள்- நான் போய் விஸ்கிக்கு ஏற்பாடு செய்கிறேன்!
அப்படியே- சீட்டுக் கட்டு களும் வரட்டும்!
ஓ- அனுப்பு கிறேனே!


சும்மா நலம் விசாரித்தேன்- தப்பா?
நோட்டு அச்சடிக்கத் தேவை யான அச்சை தயாரிக்கும் திறமை உனக்கு இருக்கிறது என்பதற்காக மனதுக்குள்ளே ரொம்ப பெரிய மனுஷன் என்கிறதாக நினைப்போ உனக்கு?
உஷ்-மூடு வாயை!
இதற்கிடையே
அந்த இரு யமன்களும் குகையினுள் நுழைய யத்தனித்தால் நாங்கள் அவர்களைக் கொன்று விடவா?
ஆமாம்! ஆனால் துப்பாக்கியைப் பயன்படுத் தாதீர்கள்! கிராமத்திற்கு ஏகப்பட்ட விருந் தாளிகள் வந்திருக்கிறார்கள்! நமக்குக் கெட்ட பேர் வந்து விடக் கூடாது!
அப்படியானால் இந்தப் பயன்படுத்துகிறோம்!
ஓ.கே. ஆனால், எக்காரணம் கொண்டும் பெரிதாக ஓசை எழும்பக் கூடாது என்பதை மறந்து விட்டார்கள்!
சில மணி நேரம் கழித்து- இருள் கவிழத் தொடங்கிய வேளையில்-
ஏதாவது பார்வையில் பட்டதா?
இல்லை டெக்ஸ்! பாலத்திற்கு இரு பக்கமும் ஆற்றங்கரையோரம் எந்தப் புதரும் இல்லை!



தகவல் தெளிவாக உள்ளதே- பாலத்திலிருந்து சுமார் ஒரு மைல் தொலைவு- ஆற்றங்கரையோரம்- பெரிய புதர்- நிலவறை-
ஒரு வேளை தகவல் முழுமையாக இல்லையோ என்னவோ?
அல்லது அவன் வேறொரு ஆற்றை குறிப்பிட்டிருக்கலாம்!
ஆனால் அவன் குறிப்பிட்ட மாதிரி இந்தப் பகுதியில் புதர் இல்லையே!
ஒரு வேளை-
என்ன யோசனை?
ஆற்றின் மறுகரையைக் குறிப்பிட்டிருப்பானோ?
பைனாகுலரை எடுத்து வா!
மறுகரையில் புதர் இருக்கும் என்று நம்புகிறாயா?
நிச்சயமாக!
வெர்ஜுன் இப்பகுதிக்கு புதியவன்!


எனவே. ஆற்றின் ஒரு கரை அமெரிக்க எல்லை என்றும், மறுகரை மெக்ஸிக்கன் எல்லை என்றும் அவனுக்குத் தெரியாமல் இருந்திருக்கலாம்!
மேலும் இன்னும் சற்று தெளிவாக விபரங்களை தெரிவித்திருக்கலாம்!
மறுகரை இங்கிருந்து தெளிவாக தெரிகிறது.
எதற்கும் சற்று விழிப்போடு இரு-
அந்த பைனகுலரை இப்படிக் கொடு!
பாலத்திலிருந்து சுமார் ஒருமைல் தொலைவு தெற்குப் பக்கம் எனில் நமக்கு நேர் எதிரே தெரியும் பகுதிதான்.
ஒரு சிறு கிராமம் இருக்கிறது- அருகே ஒரு பூங்கா-
ஆமாம்!
பூங்காவிலிருந்து நூறு மீட்டர் தொலைவில்- ஆற்றங்கரையில், பாறை அருகே! ஒரு புதர்! நாம் தேடும் புதர் அதுதான்!





பிரகாஷ் பப்ளிஷர்ஸ் நிறுவனத்தின் சார்பாக லயன் காமிக்ஸை அச்சிட்டு வெளியிடு-பவரும், ஆசிரியரும்: S. விஜயன். முகவரி: பிரகாஷ் பப்ளிஷர்ஸ், த.பெ.எண்: 374 சிவகாசி. போன்: 21159 & 20649. அச்சிட்டோர்: தி விஜய் புக்ஸ், சிவகாசி. வெளியிடு எண்:



இரண்டு மணி நேரம் கழித்து. கிராமத்தில் கேளிக்கை விழா தொடங்கியபோது...
டெக்ஸும், கார்ஸனும் நைஸாக பாறையை நெருங்கினர்...
ஹூக்கும்...அங்கே எல்லோரும் ஜாலியாக கொண்டாட்டம் போடுகிறார்கள். ஆனால்நாமோ
எரிச்சல்படாதே... நான் போய் இரண்டு விஸ்கி பாட்டில்களை தள்ளிக்கொண்டு வருகிறேன்.
நல்ல யோசனை...! பாஸை சந்தித்தால் மாற்று ஆள் அனுப்ப மறந்துவிடவேண்டாம்என்று சொல்லிவிட்டு வா...
ஓ.கே...
மிகுந்த எச்சரிக்கையோடு ஆளுக்கொரு பக்கமாக பாறையைச்சுற்றி நகர்ந்தார்கள்.
...ஒரு சில விநாடிகளுக்குப் பின்...
ஏய்ய்...!
?


டொம்!
ஒரே அடியில்
விட்டானே...!
வெறும் மயக்கம்தான்! வா... ஒருஓரமாக இழுத்துப்போடுவோம்.
பத்து நிமிடங்களுக்குப் பின் —
ஹாய்ய்... இங்கே பார் நான் என்னவெல்லாம் அள்ளிக் கொண்டு வந்திருக்கிறேன் என்று!
என்னது இது... ஜுவான்! இந்நேரம் படுத்துத் தூங்கிக்... — ஆஆஆ...
அச்சச்சோ... உயர்ரக மது — அநியாயமாக கெட்டுவிட்டது!
சீக்கிரம் ஓடிவா கிட்
இவர்களுக்கு நினைவு திரும்பு முன் ஒழித்துக்கட்டுவோம்
ஆற்றுக்குள் தூக்கிப்போட்டு விடுவோம் என்கிறுயா!



இல்லை...! படகில் போட்டு அனுப்பி விடலாம்
படகா...?—
அதான்... வரும் வழியில் சற்றுத் தொலைவில் பார்த்தோமே!
நீ அவனை தூக்கிக்கொள்!
ஆளுக்கு ஒரு நபரை தூக்கிக்கொண்டு இருவரும் ஆற்றோரமாக நடந்தார்கள்
சில நிமிடங்களுக்குப்பின், தன் போக்கில் விரைந்த படகில் பயணத்தைத்தொடங்கினார்கள் அவ்விரு ஆசாமிகளும்...
ஹேய்...பயணம் சுகமானதாக அமைய நல்வாழ்த்துக்கள்
டெக்ஸும், கிட்டும் வேறு குறுக்கீடுஏது மின்றி வேகமாக செயல்படலாயினா
இதுதான் நுழைவாயில்— உள்பக்கமாக தாழிடப் படாமலிருந்தால் நல்லது!
அதோ இருக்கிறது பார்— தாழ்ப்பாள்!
திறக்க சாவி இல்லாவிட்டால் என்ன...தாழ்ப்பாளையேஅகற்ற முயற்சிப்போம்!



படுவேகமாக இயங்கிய டெக்ஸ் தாழ்ப்பாளை கழற்றி விட்டார் ஆனால் தள்ளித், திறந்த போது கதவு வெகுசீக்கிரமாகவே எழுப்பிய 'கிறீச்' சப்தம் உள்ளே இருந்தவர்களை உசுப்பிவிட்டது
அது என்ன சப்தம்!
கதவை யாரோ திறக்கிறார்களோ?
?
அதிரடி முடிவு!
இங்கே இந்நேரம் யார் வரப் போகிறார்கள்...?
எதற்கும்போய் எட்டிப் பார்த்து விட்டு வந்துவிடுகிறேன்
ஹே...டெக்ஸ்!
உஷ்ஷ்...!
அப்போது —
நாசமாப் போச்சு...ஹே-பசங்களா...ஓடியாங்க!
டுமீல்!
டுமீல்!


சே...பார்த்து விட்டார்கள்!
அவர்களுக்கு கேடு காலம்...வேறென்ன!
ஓடிவாருங்கள்...!
சைத்தான்கள்!
டுமீல்! டுமீல்!
அரசு அதிகாரிகள்! என் செய்தி அவர்களை எட்டிவிட்டது ஒரு வழியாக!
டுமீல்! டுமீல்!
சட்டத்தின் பேரால் ஆணையிடுகிறேன்— சரணடையுங்கள்
இதுதான் என்பதில்!
டுமீல்!
பில்.,.நாங்களும் வந்துவிட்டோம்!
இரண்டே பேர்கள்தான்...!


டுமீல்!
கிட்... ஜாக்கிரதை...!
டுமீல்!
டுமீல்!
டுமீல்!
டுமீல்!
ஆ ஆ!
அவர்களை தேக்கி நிறுத்துங்கள் நான்போய் பாஸிடம் விஷயத்தை தெரிவிக்கிறேன்
ஆனால் டெக்ஸையும், கிட்டையும் தேக்கி நிறுத்துவது என்பது காட்டாற்று வெள்ளத்தை அணை கட்டி நிறுத்த நினைக்கும் முயற்சி வீண் முயற்சியாக இருந்தது
டுமீல்!


ஆ ஆ...
டுமீல்!
பின் வாங்குங்கள்
நான் எதிர்பார்த்தபடி அரசு அதிகாரிகள் வந்து விட்டனர். நான காப்பாற்றப்பட்டுவிட்டேன். நடந்தவை அனைத்தையும் அவர்களிடம் சொல்லப்போகிறேன்...
வெர்னன்!
போடா... அப்பால்! இனி உங்களுடைய ஆதிக்கம் செல்லாக்காசு!
கிழவா... எல்லாம் உன்னுடைய சேஷ்டைதானா?
உன்னை...
ஆ ஆ...
இதற்கிடையே இன்னொரு ஆசாமி தோட்டாவுக்குப் பலியானான்
ஆ ஆ!
டுமீல்



தோட்டாக்கள் சரமாரியாக வருவதைக் கண்டு பீதியடைந்த மற்ற இரு நபர்களும் ஓடிப்போகத் தீர்மானித்தனர்.
வா... ஓடிப போய்விடலாம்
டெக்ஸ்...! தப்பியோடப் பார்க்கிறார்கள்
விடக்கூடாது...
டுமீல்!
ம்ம்... ஓடு!... அந்த சைத்தான்கள் விடாமல் துரத்தி வருகின்றன...!
ஒழிந்தார்கள்!
டுமீல்!
டுமீல்!
இதற்கிடையே, அடுத்த அறையினுள்...
காவல்துறையினர் உள்ளே நுழைந்து விட்டனர் யாராவது போய் பாஸிடம் விஷயத்தை தெரிவிக்கவேண்டும்...
அச்சு இயந்திரத்தை நிறுத்து...!
போலீஸாரா...? இங்கேயா?


டுமீல்!
டுமீல்!
உ...த...வி...!
வெர்னன்—நீதானா...?
ஆ...மா...ம்!
கவலைப்படாதே...உன் பிரச்னை தீர்ந்துவிட்டது!
ஆமாம்.. இனி...இனி... எதுவுமேயில்லை!
கென்னட்டின் ஆள் ஒருவன்... என்னை சுட்டுவிட்டான்... ஆ ஆ...
கென்னட்டை கைது...செய் யுங்கள்...அவன்...அவன்தான்..
நான்முன்பு ஒருமுறைசெய்த தவறை ...அதை வெளியிட்டால் என் மகனு டைய இராணுவபதவி பறிபோய் விடும் என்று...அச்சுறுத்தி என்னை..
வற்புறுத்தி...இந்த... சட்டவிரோத...



...புரிகிறது!
அவனே
அவனே...
கவலைப்படாதே வொர்ஜன்...! கென்னட்டுக்கு உரிய தண்டனை விரைவிலேயே கிடைக்கும்
ந...ந...
நன்றி!
செத்துவிட்டானே!
இதற்கிடையே, எதிரிகளிடமிருந்து வந்த தோட்டாக்களுக்கு பதிலடி கொடுத்துக்கொண்டிருந்தார் கார்ஸன்
டுமீல்!
நிலைமை இன்னும் மோசமடைவதற்குள் நாம் வெளியேறி ஓடிப்போவது தான் புத்திசாலித்தனம்...
டுமீல்!
பின்புற வாசல் வழியாக வெளியேறி விடலாம் — ஓடி வாருங்கள்.
கிட்... நானும் வந்துவிட்டேன்!
இதற்கிடையே
ஹே....ஏன் இப்படி பதறியடித்து ஓடி வருகிறாய்?
கீழே போலீஸார் வந்து விட்டிருக்கிறார்கள்!


அந்த பணியாள் நகருமுன் மற்ற கயவர்களும் அங்கே ஓடோடி வந்து சேர்ந்தனர் —
விலகு ... துரத்திக் கொண்டு வருகிறார்கள்
அதோ... அந்த வழியாகத்தான் போயிருப்பார்கள் — விடக்கூடாது!
கேளிக்கை நிகழ்ச்சியினூடே குழப்பம் தலைதூக்கியது
உதவி!
டுமீல்!
யாரோ...போக்கிரிகள்
உதவி!
வா... போய்விடுவோம் இங்கிருந்து.
ஆ ஆ!
டுமீல்!
டுமீல்!
டுமீல்!
ஆ ஆ!


அதே சமயம் தானனுப்பிய சரக்கு பத்திரமாக வந்து சேர்ந்து விட்டதா என்றுபார்க்ககென்னட் நேரடியாக வந்திருந்தான். அச்சகத்தை மேற்பார்வை செய்து வந்த டான் டைகோவிடம் அவன் பேசிக் கொண்டிருந்த போது தோட்டா முழக்கம் ஆரம்பித்தது.
ஐயோ . ! நான் நாசமாகிப் போனேன்! இது... மோசடி...
வாயை மூடடா... முட்டாள்!
ஜாக்கிரதையாக குறி வை...கிட்! அப்பாவி ஜனங்களும் இங்கே இருக்கிறார்கள்!
டுமீல்!
டுமீல்
ஓடி வா டைகோ! அந்த இருவரையும் சுட்டு வீழ்த்திவிட்டால் நிலைமையை கட்டுக்குள் கொண்டுவந்து விடலாம்!
டுமீல்
ஆ ஆ...
டுமீல்!
டுமீல்!
நாம் இதுவரை சந்திக்காத நபர்கள் இருவர் எதிர்ப்படுகின்றனர்... கிட்!
டுமீல்!


இங்கிருந்து ஓடிப் போனால்தான் உயிர் பிழைக்கலாம்!
ஆ!
நில்லுங்கள்! வீணாக பீதியடைய வேண்டாம்! கடைவர் கும்பலை சாராத சாதாரண ஜனங்களுக்கு எந்த ஆபத்தும் வராது ...
கென்னட்டின் திடீர் மரணம் டான்டைகோவுக்கு மரண பீதியை ஏற்படுத்தியதால் சட்டென்று அவன் சரணடைந்து விட்டான்...மடமடவென்று உண்மைகளை ஒப்புதல் வாக்குமூலமாக வெளியிட்டான்.
அங்கே நடந்த துப்பாக்கிச் சூடு பற்றி காவல்துறையினருக்கு செய்தி எட்டவே, அவர்கள் விரைந்தோடி வந்து சேர்ந்தனர்.
இவனை கைது செய்ய எனக்கு அதிகாரம் இல்லை. ஆனால்...
அந்த பொறுப்பை என்னிடம் விட்டுவிடுங்கள். அவனை நான் கவனித்துக் கொள்கிறேன்!
வெரிகுட்... சார்ஜண்ட்! விரைவிலேயே உங்களுடைய தலைமையகத்திற்கு விரிவான அறிக்கையை அனுப்பிவைக்கிறேன்...
நன்றி...ஸார்!
உங்களுடைய உல்லாசத்திற்கு இடைஞ்சலாக குறுக்கே புகுந்ததற்கு மன்னிப்பு கோருகிறேன்!


அன்றிரவே, டான் டைகோவின் கிராமத்தில் நடந்த அசம்பாவிதத்தை கேள்விப் பட்ட கென்னட்டின் கூலிப்பட்டாளம், ஒட்டு மொத்தமாக லாரெடோவை விட்டு தப்பித்தோம் பிழைத்தோம் என்று ஓடியது
எங்கே ஸான் அண்டோனியாவுக்கா போகப் போகிறாய்?
ஊஹூம்... அந்த ரேஞ்சர்களுக்கு அவ்வளவு அருகில் இருக்க எனக்கு தைரியமில்லை.
நேராக மாண்டனா போய்த்தான் நிற்பேன்!
நல்ல யோசனை...! நானும் விரைவிலேயே அங்கே வந்து சேரத் தீர்மானித்துவிட்டேன்!
மறுநாள் – ஷெரீப்பின் அலுவலகத்தில் அனைவரும் ஒன்று கூடினர்.
இந்தப் பிராந்தியத்தில் இப்போது ஒரு போக்கிரிகூட இல்லை... இரவோடிரவாக எல்லோரும் எங்கோ ஓடிப் போய் விட்டார்கள்!
கேட்க சந்தோஷமாக இருக்கிறது!
காயம்பட்ட ஷெரீப் இனி பூரண ஓய்வெடுத்துக் கொள்ளலாம்... இல்லையா?
சரியாகச் சொன்னீர்கள்!
நல்ல மனிதர்கள் வாழத் தகுந்த இடமாக இந்தப் பிராந்தியத்தை சுத்தப்படுத்திய உங்களுக்கு இப் பகுதி வாழ் மக்களின் சார்பில் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.
முற்றும்.

விற்பனையாகிறது!

மினி லயன்

# கொலைக்கார கார்!




முழு நீளக் கார்ட்டூன்!

## வில்லியம் கில்பர்ட் க்ரேஸ்

1849ஆம் ஆண்டு ஜூலை 18ஆம் தேதியன்று பிறந்தார். இவர் கிரிக்கெட் உலகம் கண்ட தலைசிறந்த பலவீரர்களில் ஒருவர். இவர் மருத்துவராகத் தேர்ச்சி பெற்றும், வாழ்நாள் முழுவதும் கிரிக்கெட்தான் ஆடினார்.

இவர், ஒரு 'கிரிக்கெட் குடும்பத்தில்' பிறந்தவர். இவரது தந்தை, இரு சகோதரர்கள் அனைவரும் மிகச்சிறந்த கிரிக்கெட் வீரர்கள். இங்கிலாந்தில் பிறந்து வளர்ந்த க்ரேஸ், இங்கிலாந்து—ஆஸ்திரேலியாவிற்கு இடையே நடந்த முதல் கிரிக்கெட் பந்தயத்தில் (1880) பங்கு பெற்றார். அதைத் தொடர்ந்து 1899ஆம் ஆண்டுவரை நடந்த 11 டெஸ்ட் பந்தயங்களிலும் க்ரேஸ் இங்கிலாந்து அணித் தலைவராக இருந்தார்.

ஈடு இணையற்ற ஆட்டக்காரரான க்ரேஸ், 1863ஆம் ஆண்டிற்கும் 1900ஆம் ஆண்டிற்கும் இடையே 54,000 ஓட்டங்களைக் குவித்தார். இவர் 1876-ஆம் ஆண்டில், இங்கிலாந்தின் எம்.சி.சி. (M.C.C.) அணியில் இருக்கும்பொழுது, கென்ட் அணியை எதிர்த்து 344 ரன்களை எடுத்தார். இதுவே அவர் ஒரே இன்னிங்ஸில் அதிகமாக எடுத்த ரன்களாகும்.

முதல் தர கிரிக்கெட்டில் இவர் 126 முறை செஞ்சுரிகள் போட்டுள்ளார். இந்த 126 தடவைகளில் 10 தடவை இரட்டை சதமும், மூன்று தடவை முன்னூறு ஓட்டங்களுக்கு அதிகமாகவும் ரன்களைக் குவித்தார்.

க்ரேஸ், ஒரு சிறப்பான பேட்ஸ்மேன் மட்டுமன்றி சிறந்த பந்துவீச்சாளரும் கூட. இவர் மொத்தம் 2800 விக்கெட்டுக்களை முதல்தரக் கிரிக்கெட்டில் வீழ்த்தி சாதனை புரிந்தார். இங்கிலாந்தின் ஒரு கிரிக்கெட் சீசனில் ஏழு தடவை இவர் 100 விக்கெட்டுகளுக்கும் அதிகமாக எடுத்தார். ஆக்ஸ்பர்ட் பல்கலைக் கழகத்தை எதிர்த்து ஆடியபொழுது, க்ரேஸ் ஒரே இன்னிங்ஸில் 10விக்கெட்டுக்களையும் வீழ்த்தினார்!

## கிரிக்கெட் டாக்டர்!

க்ரேஸ் ஒருமுறை, தனது ஸ்பேனியல் நாயுடன் கூட்டாகச் சேர்ந்து புனித ஜார்ஜ் க்ளப், என்ற ஒரு பிரிஸ்டல் நகர கிரிக்கெட் அணியைத்தோற்கடித்தார்! அந்த பிரிஸ்டல் நகர குழுவில் 11 ஆட்டக்காரர்கள் ஆடினர். ஆனால் க்ரேஸின் அணியில் இருவர் மட்டுமே! —க்ரேஸ்; அவரது நாய்!

முதலில் பிரிஸ்டல் க்ளப் பேட் செய்யத் துவங்கியது. க்ரேஸ் பந்து வீசினார்; அவரது நாய் ஃபீல்டிங் செய்தது! அதன் பின்னர் கிரேஸ் பேட் செய்யச் சென்றார். ஒருவராலும் அவரை அசைக்க முடியவில்லை. இறுதியில் க்ரேஸ் அணியே வெற்றி பெற்றது!

ஆறடிக்கும் அதிகமான உயரத்துடன், கருப்புத் தாடியுடன் இருந்த க்ரேஸ் 1915ஆம் ஆண்டு அக்டோபர் 23ஆம் நாளன்று இறந்தார். கிரிக்கெட் உலகம் ஒரு மாமேதையை இழந்தது! ●